தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### ஊட்டச்சத்து மிகுந்த உணவுப் பொருள்களை உற்பத்தி செய்ய வேண்டும்

**பெங்களூரு,**

ஊட்டச்சத்து மிகுந்த உணவு பொருள்களை உற்பத்தி செய்ய விவசாயிகள் ஆர்வம் காட்ட வேண்டும் என்று, வேளாண் விஞ்ஞானி என்.எஸ். சுவாமிநாதன் கேட்டுக் கொண்டார்.

பெங்களூருவில் புதன்கிழமை நடைபெற்ற இந்திய ஊட்டச்சத்து மாநாட்டைத் தொடக்கிவைத்து அவர் பேசியது:

இந்தியாவில் பெரும்பாலான மக்கள் பசியால் வாடுகின்றனர். இவர்கள் அனைவருக்கும் உணவு வழங்கி, 100 சதம் பசியில்லாத நாடாக இந்தியாவை மாற்ற வேண்டும். பல பகுதிகளில் நாம் உணவுகளை வீணடித்து வருகிறோம். இதைக் கட்டுப்படுத்த வேண்டும்.

தெற்காசிய நாடுகளில் 39 சதம் குழந்தைகள் ஊட்டச்சத்து குறைபாடுகளுடன் பிறக்கின்றனர். வரும் காலங்களில் போரில் இறப்பதைவிட, உணவு பஞ்சத்தால் உயிரை இழப்பவர்களின் எண்ணிக்கைதான் அதிகரிக்கும் என விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

பல்வேறு காரணங்களால் நாட்டில் விளையும் பொருள்கள் ஊட்டச்சத்தை இழந்துள்ளது.

ஊட்டச்சத்துள்ள உணவுப் பொருள்களை விவசாயிகள் உற்பத்தி செய்ய வேண்டும். நாட்டில் பசிக் கொடுமையைப் போக்கி, ஊட்டசத்துள்ள உணவுகளை மக்களுக்கு வழங்க அரசு போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார் அவர்.

## கறவை மாட்டுப் பண்ணையில் தரமான பால் உற்பத்தி முறைகள்



**ஆண்டிபட்டி,**

பால் ஓர் இன்றியமையாத சமச்சீர் உணவாகும். இது, பச்சிளம் குழந்தைகள் முதல் வயதானவர்கள் வரை அனைவருக்கும் ஏற்ற உணவாகும். பாலில் அசுத்தம் சேராதவாறு சேகரித்து நன்கு காய்ச்சி உட்கொள்வது மிக முக்கியம்.

பாலில் கொழுப்புச் சத்து, புரதச் சத்து, வைட்டமின்கள் போன்ற பல இன்றியமையாத சத்துப் பொருள்கள் உள்ளன. சாதாரணமாக விற்பனைக்கு வரும் பசும்பாலில் 3.5 சதம் கொழுப்பு சத்தும், 8.5 சதம் கொழுப்பில்லாத மற்ற திடப்பொருளும் இருத்தல் வேண்டும். பாலில் நமது உடலுக்குத் தேவையான எல்லா ஊட்டச் சத்துகளும் சரியான விகிதத்தில் உள்ளன.

இதுகுறித்து, தேனி உழவர் பயிற்சி மையப் பேராசிரியர்கள் இரா. உமாராணி, நா.ஸ்ரீ. பாலாஜி மற்றும் அ. செந்தில்குமார் ஆகியோர் கூட்டாக வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

அசுத்தமான சூழ்நிலையில் பால் உற்பத்தி செய்தால், பாலின் மூலம் காசநோய், தொண்டை அடைப்பான், டிப்தீரியா, டைபாய்டு, வயிற்றுப்போக்கு முதலிய நோய்கள் வரக்கூடும். மேலும், பாலில் சேரும் கிருமிகள் பன்மடங்கு பெருகி, அதன் தரத்தையும் கெடுத்துவிடும்.

பாலை வெளியே வெதுவெதுப்பாக நம் சுற்றுச் சூழ்நிலையில் நீண்ட நேரம் வைத்திருக்க முடியாது. கிருமிகள் வெகுவாக வளர்ந்து பால் கெட்டு விடும். எனவே, கறவை மாடுகள் வைத்திருப்போர், சுத்தமாக பால் உற்பத்தி செய்வது பற்றி அறிந்து, கடைப்பிடிப்பது மிகவும் அவசியம்.

**பால் கறக்கும் முறைகள்**

முழு விரல்களை உபயோகித்தல்: இம் முறையில் ஒரு கையின் விரல்களால் காம்பினைப் பிடித்து, உள்ளங்கையில் அழுத்துவதால் பால் கறக்க முடியும். இம் முறையில் காம்பின் எல்லா பாகங்களிலும் ஒரே அளவான அழுத்தம் கிடைக்கும். பெரிய காம்புகள் உள்ள பசுக்களிலும், எருமைகளிலும் இம் முறையைக் கையாள்வது சிறந்தது.

இரு விரல்களை உபயோகித்தல்: கட்டை விரலுக்கும், ஆள்காட்டி விரலுக்கும் இடையில் காம்புகளைப் பிடித்து, சிறிய அழுத்தம் கொடுப்பதன் மூலம் பால் கறக்க முடியும். இம் முறையில் காம்புகளுக்கு ஒரே சீரான அழுத்தம் கிடைக்காது. மேலும், காம்பின் மேல் பாகம் இதனால் பாதிக்கப்பட்டு, சிறு காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டு. இம் முறையைக் காட்டிலும் முழு விரல்களை உபயோகிப்பது சிறந்தது.

பால் கறத்தல்: மாடுகளில் பால் கறத்தல் என்பது தனிக் கலையாகும். இதற்கு, முதிர்ந்த நல்ல அனுபவமும், திறமையும் தேவை. பால் கறக்கும்போது கவனமாகவும், அமைதியாகவும், விரைவாகவும், அதே சமயம் பாலை முழுமையாகவும் கறக்க வேண்டும்.

சுத்தமாக பால் கறக்கும் முறைகள்: பால்காரர் தனது கையை சுத்தமாகக் கழுவ வேண்டும் மற்றும் மாட்டின் மடியை சுத்தமாகத் துடைக்க வேண்டும். காம்பிலிருந்து வரும் முதல் பீச்சில் திரி மற்றும் சீழ் இருக்கிறதா என்று பரிசோதித்து, அவ்வாறு இருந்தால் கீழே ஊற்றி விட வேண்டும்.


பாலில் சேரும் அசுத்தத்தைக் கட்டுப்படுத்தும் முறைகள்: கறவை மாடுகளின் மடியிலேயே சில கிருமிகள் இருப்பதற்கு வாய்ப்புண்டு. ஆரோக்கியமான மாடுகளில் இவ் வகையான கிருமிகள் எவ்விதமான கெடுதலும் செய்வதில்லை. எனவே, பால் கறக்கும்போது முதலில் வரும் பாலை நீக்கி விட வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் காம்பினுள் உள்ள கிருமிகளை நீக்கி விடலாம். மாடுகளை அடிக்கடி நன்கு தேய்த்து, கழுவி சுத்தமாக வைத்திருக்க வேண்டும். மடியின் மீதும், பக்கத்திலுள்ள இடங்களிலும் நீண்ட உரோமம் காணப்பட்டால், அவற்றை கத்தரித்து நீக்கலாம். கறப்பதற்கு முன் மடி, பக்கத் தொடை ஆகிய பாகங்களை பொட்டாசியம் பெர்மாங்கனேட் கலந்த நீரினால் கழுவி, சுத்தமான

துணியால் துடைக்க வேண்டும். கொட்டகையில் கிருமி நாசினி தெளித்து சுத்தமாக வைத்திருக்க வேண்டும். சுத்தமான பாத்திரங்களை உபயோகப்படுத்த வேண்டும். பால் பாத்திரங்களை சுத்தம் செய்தபின், தண்ணீர் அல்லது சுடுதண்ணீராலோ சுத்தம் செய்ய வேண்டும். சூரிய ஒளியில் நன்கு உலர்த்திட வேண்டும். ஈரத்தைப் போக்க துணியைக் கொண்டு துடைப்பது நல்லதல்ல. சோப்பு உபயோகிக்கக் கூடாது. ஏனென்றால், இவை பாலில் ஒவ்வாத வாசனையை ஏற்படுத்திவிடும். பால் கறப்பதற்கும், சேகரிப்பதற்கும் அதற்கென தயாரிக்கப்பட்ட பாத்திரங்களை உபயோகிக்க வேண்டும்.

பாலை பாதுகாத்தல்: பாலை கறந்தவுடன் கொட்டகையில் இருந்து அப்புறப்படுத்த வேண்டும். இல்லையென்றால், மாட்டுத் தொழுவத்தில் உள்ள நாற்றம் பாலில் சேர்ந்து விடும். பாலை கறந்தவுடன் வடிகட்ட வேண்டும். பாலை 5 டிகிரி செல்சியஸுக்கு குளிர்ப்படுத்த வேண்டும். குளிர் சாதனம் இல்லையெனில், குளிர்ந்த நீரில் பாத்திரத்தை வைக்க வேண்டும். பாலை கறந்த 4 மணி நேரத்துக்குள் விற்பனை நிலையத்துக்கு அனுப்ப வேண்டும் என்றனர்.

மேலும் இது குறித்து தகவல் பெற விரும்புவோர், உழவர் பயிற்சி மையம், தேனி என்ற முகவரியிலோ அல்லது 04546-260047 என்ற எண்ணிலோ தொடர்பு கொள்ளலாம் என்றனர்.

**தூய விதையே சாகுபடிக்கு உகந்த நல்விதை!**



**திருநெல்வேலி,**

சாகுபடி செய்யும் விவசாயிகள் தூய விதையே நல்விதை என்பதை கருத்தில் கொண்டு பரிசோதனை செய்யப்பட்ட விதையைப் பயன்படுத்துமாறு வேளாண்துறையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக திருநெல்வேலி விதை பரிசோதனை அலுவலர் மூ.மு. முகம்மதுகாசீம் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

விதை உற்பத்தியாளர்கள், விற்பனையாளர்கள் தாங்கள் உற்பத்தி செய்யும் மற்றும் விற்பனை செய்யும் விதைகள் அதிகம் சுத்தத் தன்மை கொண்டதாக இருக்க வேண்டியது அவசியம் ஆகும்.

சுத்தமான விதைகள், விதைப்பின்போது சீராக விதைப்பதற்கும், வேண்டிய அளவு பயிர் எண்ணிக்கை பராமரிப்பதற்கும் எளிதாக அமையும் என்பதில் சந்தேகம் இல்லை.

நெல் சிறுதானியங்கள், பயறு ஆகிய விதைகளுக்கு 98 சதம் புறச்சுத்தமும், வெண்டை 99 சதவிகிதமும், கேழ்வரகு, எள் 97 சதவிகிதமும், நிலக்கடலை, முருங்கை ஆகியன 96 சதவிகிதமும், கீரை, மல்லி ஆகியன 95 சதவிகிதமும் புறச்சுத்தம் இருத்தல் வேண்டும்.

திருநெல்வேலி விதைப் பரிசோதனை ஆய்வகத்திற்கு பரிசோதனைக்கு விதைகளை அனுப்பும்போது, தூய விதை, பிறதானிய விதை, உயிர்ப்பற்ற பொருள், மற்றும் களை விதை ஆகியவற்றை தனித்தனியே கணக்கிடப்பட்டு புறத்தூய்மை பரிசோதனை மேற்கொள்ளப்படுகிறது. எனவே விவசாயிகள் இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி தாங்கள் பயன்படுத்தும் விதைகளின் சுத்தத் தன்மை தெரிந்து சாகுபடிக்கு பயன்படுத்திட வேண்டும்.

விதைப் பகுப்பாய்வு அவசியம்: திருநெல்வேலி மாவட்டத்தில் அமைந்திருக்கும் விதைப் பரிசோதனை ஆய்வகத்திற்கு இம் மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் விதை விற்பனையாளர்கள் மற்றும் விதை உற்பத்தியாளர்கள் விதை மாதிரிகள் பரிசோதனை செய்ய அனுப்பும்போது சில விதிமுறைகளை கடைப்பிடிக்க வேண்டும். தங்களிடம் இருப்பில் உள்ள விதைக் குவியலில் இருந்து நெல் விதை 400 கிராம், மக்காசோளம், உளுந்து, பாசிப்பயிறு, தட்டைப்பயிறு, நிலக்கடலை, சூரியகாந்தி ரகம் மற்றும் ரகப்பருத்தி பஞ்சு உள்ளது.

வெண்டை போன்றவை 1,000 கிராம் வீதமும், சோளம், தக்கைப்பூண்டு மற்றும் சோளம் விதை 900 கிராம், கம்பு, மிளகாய், கத்தரி தலா 150 கிராம் வீதமும் மாதிரிகள் எடுத்து பரிசோதனைக்கு அனுப்ப வேண்டும்.

விதை மாதிரிகளை துணிப்பையில் எடுத்து அதனுள் வைக்க வேண்டும். விவரச் சீட்டில் பயிர், ரகம், குவியல் எண், அறுவடைத் தேதி உள்ளிட்ட விவரங்கள் குறிப்பிட வேண்டும். ஒவ்வொரு மாதிரிக்கும் ரூ. 30 வீதம் கட்டணம் செலுத்த வேண்டும் என்றார் அவர்.

**தமிழக மீனவர்கள் விடுவிப்பில் தாமதம்: இலங்கை மீனவர்களுடனான பேச்சுவார்த்தை தள்ளிவைப்பு**

**சென்னை,**

தமிழகம் மற்றும் இலங்கை மீனவர்களுக்கு இடையே கொழும்பில் வியாழக்கிழமை (மார்ச் 13) நடைபெறுவதாக இருந்த பேச்சுவார்த்தை தள்ளிவைக்கப்பட்டுள்ளது.

தமிழகம் மற்றும் இலங்கை மீனவர்களுக்கு இடையிலான இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தையை கொழும்பு நகரில் நடத்த முடிவு செய்யப்பட்டிருந்தது. பேச்சுக்கு முன்பாக, இலங்கை சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள அனைத்து தமிழக மீனவர்களையும் விடுவிக்க வேண்டும் என்று முதல்வர் ஜெயலலிதா கோரிக்கை விடுத்திருந்தார். மேலும் இது தொடர்பாக பிரதமர் மன்மோகன் சிங்குக்கும் கடிதம் எழுதினார்.

ஆனால் இலங்கை சிறைகளில் உள்ள மீனவர்களை விடுவிக்க அந்நாட்டு அரசு தொடர்ந்து தாமதம் காட்டி வந்தது. இதையடுத்து மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்கக் கோரி, மத்திய வெளியுறவுத் துறை இணைச் செயலாளர் சுசித்ரா துரைக்கு, தமிழக மீன்வளத் துறை செயலாளர் விஜயகுமார், செவ்வாய்க்கிழமை இரவு கடிதம் எழுதினார்.

முதல்வர் ஜெயலலிதாவின் வேண்டுகோள் மற்றும் அரசுத் துறை செயலாளரின் கடிதம் ஆகியவற்றால், இலங்கை சிறையில் அடைக்கப்பட்டிருந்த 116 தமிழக மீனவர்களை புதன்கிழமை காலை விடுவிக்க அந்த நாட்டு நீதிமன்றம் உத்தரவிட்டது. ஆனாலும், 60-க்கும் மேற்பட்ட மீனவர்கள் இலங்கை சிறைகளிலேயே உள்ளனர். இதன் மூலம், பேச்சுவார்த்தைக்கு முன்பாக அனைத்து

மீனவர்களையும் விடுவிக்க வேண்டும் என்ற தமிழக அரசின் வேண்டுகோளை இலங்கை முழுவதுமாக ஏற்கவில்லை. இலங்கை அரசின் நடவடிக்கையால் தமிழக மற்றும் இலங்கை நாட்டு மீனவர்களுக்கு இடையே கொழும்புவில் வியாழக்கிழமை (மார்ச் 13) நடைபெறவிருந்த பேச்சுவார்த்தை தள்ளிவைக்கப்பட்டதாக மீனவ சங்கங்களைச் சேர்ந்தவர்கள் தெரிவித்தனர்.

இது குறித்து, அரசுத் துறை உயரதிகாரிகளிடம் கேட்டபோது, இலங்கை சிறைகளில் உள்ள தமிழக மீனவர்கள் அனைவரையும் விடுவிக்க வேண்டும் என்பதே மாநில அரசின் முதல் கோரிக்கை.

இதன் பின்பே, பேச்சுவார்த்தையை சுமுகமாக நடத்த முடியும். தமிழகத்தின் நிலை குறித்து மத்திய அரசுக்கு செவ்வாய்க்கிழமை அனுப்பப்பட்ட கடிதத்தில் தெளிவாக தெரிவிக்கப்பட்டுள்ளது எனக் கூறினர். பேச்சுவார்த்தை தள்ளிவைப்பு போன்ற விவரங்களைத் தெரிவிக்க அவர்கள் மறுத்து விட்டனர்.

கொழும்பில் வியாழக்கிழமை பேச்சுவார்த்தை நடைபெற வேண்டுமென்றால், தமிழக மீனவர் சங்கங்களைச் சேர்ந்த 13 பேரும் புதன்கிழமையே அங்கு சென்றிருக்க வேண்டும். அவர்களுடைய பாஸ்போர்ட்டுகளை மட்டும் தமிழக அரசுத் துறை அதிகாரிகள் ஏற்கெனவே பெற்றுச் சென்றுள்ளனர். ஆனால் அவர்கள் பயணிக்கும் தேதி இறுதி செய்யப்படவில்லை. இதனால், அவர்களுடைய பயணம் தள்ளிவைக்கப்பட்டுள்ளதாக மீன்வளத் துறை இயக்குநரக அலுவலர்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

## கோமாரி நோய் தடுப்பூசி முகாம்

**திருவள்ளூர்,**

திருவள்ளூர் ஒன்றியத்துக்கு உள்பட்ட ஈக்காடு ஊராட்சியில் கால்நடைகளுக்கான கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நடைபெற்று வருகிறது.

திருவள்ளூர் ஒன்றியத்துக்கு உள்பட்ட பகுதிகளில் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி முகாம் மார்ச் 1 முதல் மார்ச் 21-ஆம் தேதி வரை நடைபெற்று வருகிறது.

முகாமையொட்டி திருவள்ளூர் ஒன்றிய அலுவலகத்தில் உள்ள கிளை கால்நடை மருத்துவமனைகளில் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி

போடப்படுகிறது.

மேலும் கால்நடை ஆய்வாளர் ரேவதி, கால்நடை உதவி ஆய்வாளர் கவியரசி ஆகியோர் ஈக்காடு ஊராட்சி மற்றும் ஈக்காடு கண்டிகை மற்றும் சுற்றுப்பகுதிகளுக்குச் சென்று கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசிகளைப் போட்டு வருகின்றனர்.

கடந்த 10 தினங்களில் இதுவரை 1,200-க்கும் மேற்பட்ட கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளதாக தெரிகிறது.

மேலும் மாடுகளின் கால் குளம்புகளில் புண், வாய்ப்புண், நுரை வடிதல் உள்ளிட்ட அறிகுறிகள் தெரிந்தால் உடனடியாக தங்களின் கால்நடைகளை திருவள்ளூர் ஒன்றிய அலுவலகம் அருகில் உள்ள கால்நடை கிளை மருத்துவமனைக்கு அழைத்து வந்து சிகிச்சைப் பெறலாம் என கால்நடை ஆய்வாளர் ரேவதி கூறினார்.

## உற்பத்தி குறைவால் புளி விலை உயர்வு

**திண்டுக்கல்,**

மழையில்லாமல் உற்பத்தி குறைந்ததால், புளி விலை உயர்ந்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

திண்டுக்கல் மாவட்டம் நத்தம், சாணார்பட்டி, அஞ்சுகுழிப்பட்டி, கோணப்பட்டி, வேம்பார்பட்டி, அய்யாபட்டி உள்ளிட்ட இடங்களில் புளி உற்பத்தி செய்யப்படுகிறது. ஆண்டு தோறும் மாசி, பங்குனி மாதங்களில் இந்த பகுதியிலிருந்து திண்டுக்கல் மாவட்டத்தின் பிற பகுதிகள் மட்டுமின்றி வெளியிடங்களுக்கும் புளி அனுப்பி வைக்கப்படுவது வழக்கம்.

முழுப் பழமாகவும், கொட்டை நீக்கப்பட்ட தனிப்புளியாகவும் இரண்டு ரகமாக விவசாயிகள் கொண்டு வரும் புளிக்காக திண்டுக்கல் நாகல் நகர் பகுதியில் ஆண்டுதோறும் மாசி, பங்குனி மாதங்களில் ஒவ்வொரு திங்கள்கிழமையும் புளி சந்தை நடைபெறும். அதன்படி இந்த ஆண்டுக்கான புளி சந்தை திங்கள்கிழமை (மார்ச் 10 ஆம் தேதி) தொடங்கியது. கடந்த ஆண்டு போதிய மழை பெய்யாததால், புளி விளைச்சல் குறைந்துள்ளதாக தெரிவிக்கிறார் சாணார்பட்டியைச் சேர்ந்த விவசாயி க. நெவலி. மேலும் அவர் தெரிவித்தது: எனக்கு 40 மரங்கள் உள்ளன. அதன் மூலம் சுமார் 1000 கிலோ புளி ஆண்டுதோறும் கிடைத்து வந்தது. இந்த

நிலையில் கடந்த 2 ஆண்டுகளாக போதிய மழையில்லாமல் போனதால் தற்போது உற்பத்தி, பாதிக்கும் குறைவாக 400 கிலோ மட்டுமே கிடைத்துள்ளது. 10 கிலோ கொண்ட புளி பொதி, தரத்திற்கு ஏற்றவாறு ரூ.300 முதல் ரூ.420 வரை விற்பனையாகிறது. கடந்த ஆண்டு அதிக விளைச்சல் இருந்ததால், ரூ.200 முதல் ரூ.250 வரை மட்டுமே விலை கிடைத்தது என்றார்.

**கச்சத்தீவு திருவிழா: மீனவர்கள் மீன்பிடிக்க அனுமதி மறுப்பு**

**ராமேசுவரம்,**

கச்சத்தீவு திருவிழாவையொட்டி பாதுகாப்புக் கருதி மீன்வளத்துறை அதிகாரிகள் மீன்பிடிக்க அனுமதி வழங்காததால் ராமேசுவரம், பாம்பன், மண்டபம் ஆகிய பகுதி மீனவர்கள் கடலுக்குச் செல்லவில்லை.

இந்திய, இலங்கை இரு நாடுகளைச் சேர்ந்த பக்தர்கள் கலந்து கொள்ளும் கச்சத்தீவு திருவிழா மார்ச் 15,16 ஆம் தேதிகளில் நடைபெறவுள்ளது. திருவிழாவையொட்டி கடலில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. இதையொட்டி மீன்பிடிக்க அனுமதி வழங்கப்படாததால் மீனவர்கள் புதன் கிழமை முதல் கடலுக்கு மீன்பிடிக்க செல்லவில்லை.

இதுகுறித்து மீனவர் பிரதிநிதி எமரிட் கூறும்போது, கச்சத்தீவு திருவிழாவில் குடும்பத்துடன் 2000 ஆயிரம் மீனவர்கள் கலந்து கொள்கின்றனர். திருவிழா முடிந்தவுடன் வழக்கம்போல் மார்ச் 17 ஆம் தேதி மீண்டும் கடலுக்குச் செல்வோம் என தெரிவித்தார்.

**தென்னை விவசாயிகளுக்கு பயிற்சி**

**உடுமலை,**

தென்னை விவசாயிகளுக்கான 5 நாள் பயிற்சி முகாம் உடுமலையை அடுத்துள்ள மடத்துக்குளம் பகுதியில் திங்கள்கிழமை துவங்கியது.

தென்னை வளர்ச்சி வாரியம், மடத்துக்குளம் தென்னை உற்பத்தியாளர்கள் கூட்டமை ப்பு ஆகியவற்றின் சார்பில் நடைபெறும் இந்த பயிற்சி முகாம், மார்ச் 10-ஆம் தேதி துவங்கி 15-ஆம் தேதி வரை நடைபெற உள்ளது. மடத்துக்குளம்

எம்எல்ஏ சி.சண்முகவேலு சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பயிற்சி முகாமை துவக்கி வைத்தார்(படம்).

தென்னை வளர்ச்சி வாரிய ஆலோசகர் ஜெ.பெரியநாயகம் சிறப்புரையாற்றினார். இந்த பயிற்சி முகாமில் பங்கேற்கும் விவசாயிகளுக்கு ரூ. 3,500 மதிப்புள்ள தென்னைமரம் ஏறும் கருவியும், ரூ. 1 லட்சத்திற்கான பொதுக் காப்பீடு சான்றிதழும் வழங்கப்பட உள்ளன.

துவக்க விழாவில், அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை இயக்குநர் எஸ்.ராஜ்குமார், டி.ஜெயமணி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## பவானிசாகர் அணை நீர்மட்டம் 49.90 அடி

**ஈரோடு,**

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் புதன்கிழமை நிலவரப்படி 49.90 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 721 கன அடி நீர் வந்தது.

அணையில் இருந்து ஆற்றில் 100 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர்இருப்பு 4.41 டி.எம்.சி.

## யூகலிப்டஸ் மரங்களை அகற்றும் முடிவை கைவிட தைல உற்பத்தியாளர்கள் சங்கம் வலியுறுத்தல்

**உதகை,**

நீலகிரி மாவட்டத்தில் யூகலிப்டஸ் மரங்களை அகற்றும் முயற்சிகளை கைவிட வேண்டுமென, நீலகிரி மாவட்ட கற்பூர தைல உற்பத்தியாளர்கள், தொழிலாளர்கள் மற்றும் வியாபாரிகள் நலச் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. இதுதொடர்பாக இந்தச் சங்கத் தலைவர் எஸ்.அப்துல் ரகுமான் நீலகிரி ஆட்சியரிடம் கொடுத்துள்ள மனுவில் கூறியிருப்பதாவது:

÷நீலகிரி மாவட்டத்திலுள்ள சீகை மரங்கள், பைன் மரங்கள் ஆகியவற்றுடன் யூகலிப்டஸ் எனப்படும் கற்பூர மரங்களையும் அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு

வருவதாகவும், அதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் வெளியாகியுள்ள தகவல் நீலகிரி தைலம் தொடர்பான தொழிலில் ஈடுபட்டுள்ள அனைவரையும் அதிர்ச்சி அடையச் செய்துள்ளது.

சீகை மரங்களையும், பைன் மரங்களையும் அகற்றுவதில் யாருக்கும் எவ்வித ஆட்சேபணையுமில்லை. இத்தகைய மரங்களால் எவ்வித நன்மைகளும் இல்லாததோடு, பல்வேறு இடையூறுகள் மட்டுமே உள்ளன. ஆனால், இவற்றோடு சேர்த்து யூகலிப்டஸ் மரங்களையும் அகற்றுவது துரதிருஷ்டவசமானது. இம் மரங்களால் அரசுக்கும், மக்களுக்கும் பல்வேறு நன்மைகளே உள்ளன. ÷யூகலிப்டஸ் மரங்கள் அதிகளவில் உள்ள பகுதிகளில் அதிகளவில் புல்வெளிகள் உள்ளன. இது மேய்ச்சல் நிலமாக பயன்படுகிறது. யூகலிப்டஸ் மரங்கள் உள்ள பகுதிகளில் மண் சரிவுகளும் ஏற்படுவதில்லை. சில ஆண்டுகளுக்கு முன்னர் நீலகிரியில் பெரும்பாலான இடங்களில் மண் சரிவு இடர்ப்பாடு ஏற்பட்ட போதிலும், கற்பூர மரங்கள் இருந்த பகுதிகளில் மட்டும் மண் சரிவே ஏற்படவில்லை என்பது உறுதிபடுத்தப்பட்ட தகவல்.

இம் மரங்களிலிருந்து உதிர்ந்து விழும் இலைகளைக் கொண்டு நீலகிரி தைலம் உற்பத்தி செய்து நேரடியாகவும், மறைமுகமாகவும் ஆயிரக்கணக்கான மக்கள் பயனடைந்து வருகின்றனர். நீலகிரி தைலம் நீலகிரிக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் வாங்கிச் செல்லும் பொருள்களில் முதலிடத்தைப் பிடிக்கிறது. இங்கு உற்பத்தி செய்யும் தைலம் பல்வேறு மாநிலங்களில் விற்பனையாகிறது. இந்த தைலம் பல்வேறு மருந்து பொருட்கள் தயாரிக்கவும் பயன்படுத்தப்படுகிறது. ÷நீலகிரியில் தற்போது யூகலிப்ட்ஸ் மரக்கன்றுகள் நடவு செய்வதும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இதற்கு மாற்றாக கடந்த 15 ஆண்டுகளாகவே சோலை மரக்கன்றுகள் நடவு செய்யப்படுகின்றன. ஆனால், பருவநிலை மாற்றங்களால் சோலை மரக்கன்றுகள் அனைத்து இடங்களிலும் வளரவில்லை.

எனவே, இத்தகைய பிரச்னைகளையும் கருத்தில் கொண்டு, நீலகிரியில் யூகலிப்டஸ் மரங்களை முற்றிலுமாக அகற்றும் முயற்சிகளை கைவிட வேண்டும் என மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கொப்பரை, இளநீருக்கு உகந்த தென்னங் கன்றுகள் விற்பனை**

**நாமக்கல்,**

கொப்பரை, இளநீருக்கு மிகவும் உகந்த தென்னை ரகங்கள் நாமக்கல்லில் விற்பனைக்குத் தயாராக உள்ளதாக வேளாண் அறிவியல் நிலையத் திட்ட ஒருங்கிணைப்பாளர் பா.மோகன் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி வளாகத்தில் செயல்படும் வேளாண் அறிவியல் நிலையத்தில் மேற்கு கடற்கரை நெட்டை, அரசம்பட்டி நெட்டை ரக தென்னங்கன்றுகள் விற்பனைக்கு தயாராக உள்ளன. இவை வறட்சியைத் தாங்கி வளரக்கூடியது.

கொப்பரைக்கு மிகவும் உகந்த இதன் காய்கள் அதிக எண்ணைச் சத்து கொண்டவை. தவிர, இளநீர் ரகமான செப்காட் ஆரஞ்சு குட்டையும் விற்பனைக்கு போதிய அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளன.

இந்த ரக தென்னங் கன்றுளை தங்கள் பண்ணைகளில் நடவு செய்ய விருப்பமுள்ள விவசாயிகள், பண்ணையாளர்கள் நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலையத்தை அணுகி பெற்றுக் கொள்ளலாம்.

ஒன்று முதல் 6 மாதம் வரை வளர்ச்சியடைந்த இந்தத் தென்னங் கன்றுகள் தலா ரூ.45 என்ற விலைக்கு விற்கப்படுகின்றன. மேலும், விவரங்களை அறிய 04286 - 266345, 266650 என்ற தொலைபேசி எண்களில் தொடர்பு கொள்ளலாம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

**கோமாரி நோய்த் தடுப்பூசி முகாம்**

**திருச்செங்கோடு,**

கோமாரி நோய்த் தடுப்பூசி முகாம் பணிகளை நாமக்கல் மாவட்ட கால்நடைப் பராமரிப்புத் துறை இணை இயக்குநர் மருத்துவர் சக்திவேல் புதன்கிழமை ஆய்வு செய்தார்.

நாமக்கல் மாவட்ட கால்நடைப் பராமரிப்பு துறை சார்பில் 3.5 லட்சம் கால்நடைகளுக்கு 100 சத கோமாரி நோய் தடுப்பூசி போடும் வகையில், கோமாரி

நோய் தடுப்பூசி முகாம் கடந்த 1-ஆம் தேதி தொடங்கியது. இந்த முகாம் வருகிற 21-ஆம் தேதி வரை நடைபெறும்.

நாமக்கல் மாவட்ட கால்நடைப் பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குநர் மருத்துவர் சக்திவேல் தோக்கவாடி, கூடச்சேரி, எலந்தகுட்டை, பல்லக்காபாளையம் ஆகிய பகுதிகளில் கோமாரி தடுப்பூசி முகாம்களைப் பார்வையிட்டார்.

தோக்கவாடி அருகேயுள்ள நாச்சிபாளையம் முகாமில், தடுப்பூசி போடப்பட்ட கால்நடைகளுக்கான சான்றிதழ்களை விவசாயிகளிடம் அவர் வழங்கினார்.

## முட்டை விலை

**நாமக்கல்,**

நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு செவ்வாய்க்கிழமை அறிவித்த முட்டை பண்ணைக் கொள்முதல் விலை நாமக்கல்லில் ரூ.3.05, சென்னையில் ரூ.3.40. கறிக்கோழி விலை பல்லடம் பிராய்லர் ஒருங்கிணைப்புக்குழு செவ்வாய்க்கிழமை அறிவித்த கறிக்கோழி பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ.64, முட்டைக்கோழி கிலோ ரூ.44.

## கடல் அறிவியல் புலத்தில் பயிற்சி

**சிதம்பரம்,**

பரங்கிப்பேட்டையில் உள்ள கடல்அறிவியல் புலத்தில் மத்திய அரசு மனிதவள மேம்பாட்டுத் துறை நிதிஉதவியுடன் "கடல் மீன் ஒட்டுண்ணியும், நோய்களும்' என்ற தலைப்பிலான தேசிய அளவிலான பயிற்சி முகாம் மார்ச் 10, 11 ஆகிய இரு நாள்கள் நடைபெற்றது.

கடல்அறிவியல் புல முதல்வர் பேராசிரியர் க.கதிரேசன் தலைமை வகித்து முகாமைத் தொடங்கி வைத்தார்.

கடல்வாழ் உயிரின உயராய்வு மைய முன்னாள் இயக்குநரும், பேராவூரணி வெங்கடேஸ்வரா கலை, அறிவியல் கல்லூரி ஆராய்ச்சி ஆலோசகருமான பேராசிரியர் வி.ராமையன் பங்கேற்று தவளை, கானாங்கெளுத்தி மீன்களின் பயன்கள் என்ற தலைப்பில் உரையாற்றினார்.

மேலும், கடல் மீன் ஒட்டுண்ணி நோய் தீர்க்கும் மேலாண்மையியலில், இளம் ஆராய்ச்சியாளர்கள் கவனம் செலுத்த வேண்டியதின் அவசியத்தையும் அவர் எடுத்துரைத்தார். மழை பொழிய உதவும் கடல்வாழ் மிதவை உயிரினங்கள் கடல்அறிவியல் புல முதல்வர் பேராசிரியர் க.கதிரேசன் தலைமை வகித்துப் பேசுகையில், மழை பொழிய, கடலில் உள்ள மிதவை உயிரினங்களுக்கு முக்கிய பங்கு உள்ளது.

மிதவை உயிரினங்கள் இல்லையெனில் இப்பூமியில் வாழ்க்கை இல்லை என்றார்.

மேலும் அவர் பேசுகையில், கடல்வாழ் மிதவை உயிரிகள் பல்வேறு நன்மைகளை நமக்கு தருகிறது. குறிப்பாக, மிதவை உயிரினங்கள் டை மீதைல் சல்பைடு உற்பத்தியில் முக்கிய பங்கு வகிக்கிறது எனக் குறிப்பிட்டார்.

பல்கலைக்கழக புவி அறிவியல் துறைத் தலைவர் முனைவர் தி.ராம்குமார் பயிற்சி திட்டத்தினை தொடங்கி வைத்துப் பேசினார். ஒருங்கிணைப்பாளர் பி.சம்பத்குமார் வரவேற்றார். முனைவர் வெ.அசோக்பிரபு நன்றி கூறினார்.

முகாமில் கேரளா, ஆந்திரா, கர்நாடகா மற்றும் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து உதவிப் பேராசிரியர்கள், இளம் விஞ்ஞானிகள், ஆராய்ச்சியாளர்கள் உள்ளிட்ட 35 பேர் பங்கேற்றனர்.

முகாமிற்கான ஏற்பாடுகளை பேராசிரியர் என்.வீரப்பன், உதவிப் பேராசிரியர் ரவிச்சந்திரன் உள்ளிட்டோர் செய்திருந்தனர்.

## மழை பொழிய கடல்வாழ் மிதவை உயிரினங்களுக்கு முக்கிய பங்கு உள்ளது: பேராசிரியர் க.கதிரேசன்

**சிதம்பரம்,**

"மழை பொழிய, கடலில் உள்ள மிதவை உயிரினங்களுக்கு முக்கிய பங்கு உள்ளது. மிதவை உயிரினங்கள் இல்லையெனில் இப்பூமியில் வாழ்க்கை இல்லை" என அண்ணாமலைப் பல்கலைக்கழக கடல் அறிவியல் புல முதல்வர் பேராசிரியர் க.கதிரேசன் தெரிவித்தார்.

சிதம்பரம் அருகே பரங்கிப்பேட்டையில் உள்ள அண்ணாமலைப் பல்கலைக்கழக கடல்வாழ் உயிரின உயராய்வு மையம் மற்றும் கடல் அறிவியல் புலத்தில் "கடல்வாழ் மிதவை உயிரினங்களின் பல்லுயிரினம் பற்றிய பயிற்சி திட்டம்" அண்மையில் தொடங்கப்பட்டது. இப்பயிற்சி திட்டத்தை கடல்அறிவியல் புல

முதல்வர் பேராசிரியர் க.கதிரேசன் தலைமை வகித்துப் பேசினார். அவர் பேசுகையில் 'கடல்வாழ் மிதவை உயிரிகள் பல்வேறு நன்மைகளை நமக்கு தருகிறது. குறிப்பாக மிதவை உயிரினங்கள் டை மீதைல் சல்பைடு உற்பத்தியில் முக்கிய பங்கு வகிக்கிறது' என குறிப்பிட்டார்.

பல்கலைக்கழக புவி அறிவியல் துறை தலைவர் முனைவர் தி.ராம்குமார் பயிற்சி திட்டத்தினை தொடங்கி வைத்துப் பேசினார். ஒருங்கிணைப்பாளர் பி.சம்பத்குமார் வரவேற்றார். முனைவர் வெ.அசோக்பிரபு நன்றி கூறினார்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**இன்று நடக்க இருந்த மீனவர்கள் பேச்சு ரத்து**



சென்னை: இலங்கை மீனவர்களுக்கும், தமிழக மீனவர்களுக்கும் இடையே, கொழும்பில், இன்று நடக்க இருந்த பேச்சை, தமிழக அரசு புறக்கணிக்க முடிவு செய்ததால், மீனவர்கள் இலங்கை செல்லவில்லை. இதனால், பேச்சு ரத்தாகி உள்ளது.

மீனவர் பிரச்னைக்கு தீர்வு காண, இலங்கை மற்றும் தமிழக மீனவப் பிரதிநிதிகளுக்கு இடையிலான, முதல்கட்ட பேச்சுவார்த்தை, ஜனவரி, 27ம் தேதி, சென்னையில் நடந்தது. பேச்சில், 'ஒரு மாதத்திற்கு, தமிழக மீனவர்கள், எல்லை தாண்டி வரக்கூடாது; இழுவை வலை, மடிப்பு வலை, பயன்படுத்தக் கூடாது; இரு

நாட்டு கடற்படையினரும், மீனவர்களை கைது செய்யக் கூடாது; அடுத்தக் கட்ட பேச்சை, இலங்கையில், மார்ச், 13ம் தேதி நடத்த வேண்டும்' என, தீர்மானிக்கப்பட்டது. பேச்சு முடிந்து, சில தினங்களில், மீண்டும் தமிழக மீனவர்கள், 177 பேர், சிறை பிடிக்கப்பட்டனர். மீனவர்களை மீட்க, முதல்வர், பிரதமருக்கு கடிதம் எழுதினார். தமிழக மீன்வளத்துறை செயலரும், மத்திய அரசுக்கு கடிதம் எழுதினார். இதன் தொடர்ச்சியாக, நேற்று, தமிழக மீனவர்கள், 119 பேர் மட்டும் விடுவிக்கப்பட்டனர். இதனால், இரு தரப்பு பேச்சை, தமிழக அரசு புறக்கணிக்க முடிவு செய்தது. இதையடுத்து, நேற்று நடக்க இருந்த பேச்சு, ரத்தாகி உள்ளது.

## சங்கராபுரம் பகுதியில் சம்பா சாகுபடி துவக்கம்

**சங்கராபுரம்**: சங்கராபுரம் பகுதியில் விவசாயிகள் சம்மா சாகுபடியை தொடங்கி உள்ளனர்.விழுப்புரம் மாவட்டம் சங்கராபுரம் பகுதியில் விவசாயம் பிரதான தொழிலாக உள்ளது. ஏரி, குளங்கள் இருந்தாலும் பெரும்பாலான விவசாயிகள் கிணற்று பாசனத்தை நம்பி உள்ளனர்.சங்கராபுரம் பகுதியில் தியாகராஜபுரம், குளத்தூர், கடுவனூர், லக்கினாய்கன்பட்டி, மூலக்காடு ஆகிய கிராமங்களில் விவசாயிகள் சம்பா சாகுபடியை துவக்கினர். கடந்த டிசம்பர் மாதம் நிஷா புயலினால் பெய்த மழையால் ஒரு சில கிராம ஏரிகள் பாதியளவு நிரம்பியது. இதனால் கிணறுகளில் நீர் மட்டம் வேகமாக உயர்ந்தது. இதனால் விவசாயிகள் வயலை உழுது குறுவை சாகுபடி செய்தனர்.குருவை சாகுபடி செய்த நெல் அறுவடை செய்து, மீண்டும் வயலை உழுது சம்பா சாகுபடி செய்யும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். இந்த பகுதியில் 2 ஆயிரம் ஏக்கரில் சம்பா சாகுபடி பணிகள் துவங்கி உள்ளது.கடந்த ஆண்டு போதிய மழை பெய்யாததால் கிணறுகளில் நீர் மட்டம் குறைந்தது. சம்பா சாகுபடி பணிக்கு மட்டும் தேவையான அளவு தண்ணீர் உள்ளது. கிணறுகளில் நீர் மட்டம் குறைந்து வருவதால் பல விவசாயிகள் சாகுபடி பணியை துவக்காமல் நிலத்தை கரம்பாகவே போட்டு வைத்துள்ளனர்.

## கள்ளக்குறிச்சி பருத்தி சந்தையில் ரூ.2.50 கோடிக்கு கொள்முதல்

கள்ளக்குறிச்சி: கள்ளக்குறிச்சியில் நடந்த பருத்தி வார சந்தையில் நேற்று ரூ.1.50 கோடிக்கு பஞ்சு மூட்டைகள் கொள்முதல் செய்யப்பட்டது.கள்ளக்குறிச்சி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நேற்று பருத்தி வார சந்தை நடந்தது. விழுப்புரம், சேலம், கடலூர், பெரம்பலூர், திருவண்ணாமலை மாவட் டங்களைச் சேர்ந்த 711 விவசாயிகள் 7,200 பஞ்சு மூட்டைகளை விற்பனைக்கு கொண்டு வந்தனர். திண்டுக்கல், தேனி, திருப்பூர், சேலம், கோயம்புத்தூர், வேலூர், விழுப்புரம் பகுதியைச் சேர்ந்த வியாபாரிகள் பலர் பஞ்சு மூட்டைகளுக்கு விலை நிர்ணயம் செய்தனர்.எல்.ஆர்.ஏ.. பஞ்சு ரகம் ஒரு குவிண்டால் அதிகபட்சம் ரூ.5,166, குறைந்தபட்சம் ரூ.4,710க்கு விலை போனது. அதேபோல் சுவீன் பஞ்சு ரகம் ஒரு குவிண்டால் அதிகபட்சம் ரூ.6,369, குறைந்தபட்சம் ரூ.5,725க்கு விலை போனது. நேற்று 1 கோடியே 50 லட்சம் ரூபாய்க்கு பஞ்சு மூட்டைகள் கொள்முதல் செய்யப்பட்டது.

## கடுவனூரில் கோலியாஸ் விளைச்சல் அமோகம்

**மூங்கில்துறைப்பட்டு**: மூங்கில்துறைப்பட்டு அடுத்த கடுவனூரில் கோலியாஸ் பயிர் அமோகமாக உள்ளது. மூங்கில்துறைப்பட்டு அடுத்த கடுவனூரில் சம்பா நெல் பயிருக்கு மாற்றாக கோலியஸ் செடி பயிர் செய்தனர். விவசாயிகள் எதிர்பார்த்தது போல் கோலியஸ் அமோகமாக விளைச்சல் அடைந்து உள்ளது. இருந்தும் விவசாயிகள் கவலையில் உள் ளனர். கடந்த ஆண்டு கோலியஸ் நல்ல விலைக்கு விற்றது. ஆனால் இந்த ஆண்டு விலை குறைவாக விற்பனை ஆவதால் விவசாயிகள் அதிர்ச்சியடைந்து வருகின்றனர். பயிருக்காக செலவு செய்த பணம் கிடைத்தால் போதும் என விவசாயிகள் கூறுன்றனர்.

## 1.5 லட்சம் கால்நடைகளுக்கு கோமாரி தடுப்பூசி வழங்கல்

**தர்மபுரி**: தர்மபுரி மாவட்டத்தில், கடந்த, 12 நாட்களாக நடந்து வரும் கோமாரி நோய் தடுப்பூசி முகாமில், 1.5 லட்சத்துக்கும் மேலான கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி அளிக்கப்பட்டதாக, கால்நடைத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர். தர்மபுரி மாவட்டத்தில், மார்ச், 1ம் தேதி முதல் கோமாரி நோய் தடுப்பூசி சிறப்பு

முகாம் நடந்து வருகிறது. நேற்று முன்தினம், புழுதிகரை, ஜருகு, தடங்கம், நாகர்கூடல், பெலாரஅள்ளி உள்பட மாவட்டம் முழுவதும் நடந்த சிறப்பு முகாமில், பத்தாயிரத்து, 500 கால்நடைகளுக்கு கோமாரி தடுப்பூசி போடப்பட்டுள்ளது. இன்று, ஏ.ஜெட்டிஹள்ளி, ஊராட்சியில் சிறப்பு முகாம் நடக்கிறது. இதுகுறித்து, கால்நடைத்துறை அதிகாரிகள் கூறியதாவது:

தர்மபுரி மாவட்டத்தில், 3.80 லட்சம் பசு, எருமை மாடுகள் உள்ளன. கால்நடைகளை கோமாரி நோய் தாக்காமல் இருக்க, ஊராட்சி வாரியாக சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. இந்த முகாம், 21ம் தேதி வரை மாவட்டம் முழுவதும் நடக்கும். 100 பேர் கொண்ட குழுவினர், 12 நாளில் நடத்திய முகாமில், 1.5 லட்சத்துக்கும் மேலான மாடுகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடப்பட்டது. புழுதிகரை, ஜருகு மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் நடந்த முகாமில், 10 ஆயிரத்து, 500 பசு, எருமை மாடுகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடப்பட்டது. சிறப்பு முகாமில், கால்நடை வளர்ப்போர் பங்கேற்று பயனடைய வேண்டும், என்றனர்.

## பாதிப்பு : அம்மை நோயால் கோழிகள்... : பண்ணையாளருக்கு யோசனை

**ஈரோடு**: வெயில் காலத்தில், அம்மை நோய் பாதித்த கோழிகளுக்கு, இயற்கை வைத்திய முறையை, கால்நடை மருத்துவ பல்கலைக்கழகம் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி கழக மருத்துவர்கள் அறிமுகப்படுத்தி உள்ளனர்.தமிழகத்தில் நாமக்கல், ஈரோடு ஆகிய மாவட்டங்களில், எட்டு கோடி கறிக்கோழி மற்றும் முட்டை கோழிகள் உள்ளன. தினமும், கோடிக்கணக்கான ரூபாய்க்கு வர்த்தகம் நடக்கிறது.பண்ணை கோழிகளை பல்வேறு நோய் தாக்குதலில் இருந்து காக்க, தமிழகத்தில் ஈரோடு, நாமக்கல் பகுதியில், கோழி நோய் ஆராய்ச்சி கூடம் அமைந்துள்ளது.கோழிப்பண்ணைகளை பார்வையிட்டு, தக்க நேரத்தில் கோழி இன நோய்கள் குறித்து ஆராய்ந்து, பண்ணையாளர்களுக்கு தகுந்த யோசனை வழங்குகின்றனர். கோழி பண்ணைகளில் நவீன தொழில் நுணுக்க யுக்திகளை கையாள பயிற்சியளிப்பது, பண்ணையை லாபகரமாக நடத்த உதவுவது, ஆராய்ச்சி கூடத்தின் நோக்கம்.மக்களின் நுகர்வு தன்மையில் ஏற்படும் மாற்றத்தால், நாட்டு கோழிகள் இறைச்சிக்கு, அதிக வரவேற்பு பெற்றுள்ளது. நாட்டுக்கோழி வளர்ப்பு நல்ல வருமானத்தை தரக்கூடியது. இதனால், ஈரோடு மாவட்டத்தில் பிரபலமாகிய

நாட்டுக்கோழி வளர்ப்பு பண்ணை முறையில் வளர்க்கப்பட்டு வருகிறது.கோழிகளை அதிகளவில் தாக்கும் நோய்களில், வெள்ளை கழிச்சல் நோயும் ஒன்று. நாட்டுக்கோழி மிகக் கடுமையாக பாதிப்பது இந்நோய் மட்டுமே. இந்நோய் ஆண்டு முழுவதும் ஏற்பட்டாலும், அதிக அளவில் வெயில் காலங்களில் ஏற்படுகின்றன.இந்நோய் வயது வித்தியாசம் இல்லாமல், அனைத்து விதமான கோழிகளையும் தாக்கக் கூடியது. தவிர, கோழிக்கு வெயில் காலத்தில், அம்மை நோயும் அதிகளவில் தாக்கி, சப்தமில்லாமல் இறப்புகள் சதவீதம், ஈரோடு மாவட்டத்தில் அதிகரித்துள்ளது.கோழிக்கு ஏற்படும் அம்மை நோயில் இருந்து விடுபட, கால்நடை மருத்துவ பல்கலைக்கழகம் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி முனைவர்யசாதை மற்றும் டாக்டர் கவிதா ஆகியோர், இயற்கை வைத்தியம் முறையில் மருந்து கொடுக்கலாம், என தெரிவித்தனர்.மேலும், அவர்கள் கூறியதாவது:பூண்டு பத்து பல், துளசி இலை, வேப்பிலை, சூடம் ஆகியவை, தலா, 50 கிராம், மஞ்சள் தூள், பத்து கிராம், சீரகம், 20 கிராம் எடுத்து ஒன்றாக அரைக்க ÷வண்டும். விளக்கெண்ணெய் மற்றும் வேப்ப எண்ணெய் தலா, 100 மி.லி., சம அளவில் கலந்து, இதமான சூட்டில், கோழிகளுக்கு ஏற்பட்டுள்ள கொப்பளங்களில் மீது பூசவேண்டும். தவிர, சீரகம், வேப்பிலை, துளசி ஆகிய, மூன்றும் தலா, பத்து கிராம் எடுத்து, மஞ்சள், ஐந்து கிராம், பூண்டு, ஐந்து பல், மிளகு, ஐந்து ஆகியவற்றை ஒன்றாக அரைத்து, கலவையாக்கி கொள்ளவும்.இக்கலவையை அரைத்து, தீவனம் அல்லது அரிசி குருணையில் கலந்து கொடுக்க வேண்டும். மிகவும் பாதிக்கப்பட்ட கோழிகளுக்கு, சிறுசிறு உருண்டைகளாக வாய் வழியே கொடுக்க வேண்டும்.கோழி அம்மை நாட்டுக்கோழி மற்றும் கோழிப்பண்ணைகளில் பொருளாதார இழப்பை ஏற்படுத்துவதால், இந்நோய் வருமுன் தடுப்பூசி போட்டுக்கொள்வது சிறந்ததாகும், என்றனர்.

**இலக்கை தொட்டது தடுப்பு நடவடிக்கை கால்நடைகளுக்கு 1.84 லட்சம் தடுப்பூசி**

**ஈரோடு**: ஈரோடு மாவட்டத்தில், கடந்த, 11 நாளில், கால்நடை பராமரிப்பு துறை சார்பில், மொத்தம், ஒரு லட்சத்து, 83 ஆயிரத்து, 550 கால்நடைகளுக்கு, கோமாரி நோய் தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

கறவை மாடுகளுக்கு, கோமாரி நோய் தாக்காமல் இருக்க, கால்நடை பராமரிப்பு துறை சார்பில், ஆண்டுதோறும், மார்ச், ஒன்று முதல், 21ம் தேதி வரையும், செப்.,

15 முதல் அக்., ஆறாம் தேதி வரையும், தலா, 21 நாட்கள், தடுப்பூசி போடுகின்றனர். நோய் தாக்கம் அதிகமுள்ள கிராமங்களை தேர்ந்தெடுத்து, கால்நடை பராமரிப்பு துறை சார்பில், அங்குள்ள கால்நடைகளுக்கு தடுப்பூசி முகாம் நடத்தப்படுகிறது.அதன்படி, நடப்பாண்டு முதல் பருவத்துக்காக, 3.70 லட்சம் தடுப்பூசிகள், ஈரோடு மாவட்ட கால்நடை பராமரிப்பு துறையால் பெறப்பட்டது. அந்த தடுப்பூசிகள், கடந்த, ஒன்றாம் தேதி முதல், ஈரோடு மாவட்டத்தில் உள்ள, 14 யூனியனிலும், பஞ்சாயத்து வாரியாக முகாம் நடத்தப்பட்டு வருகிறது. கோமாரி நோய் தடுப்பூசி போட, உதவி மருத்துவர்கள் தலைமையில், 132 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. கால்நடை பராமரிப்பு துறை இணை இயக்குனர் ஜெயராமன், துணை இய க்குனர் பிரகாசம் தலைமையில், சிறப்பு அறிஞர் முருகன் ஆகியோர் கொண்ட அதிகாரிகள் தலைமையில், மொத்தம், 132 குழுக்கள் முடுக்கி விடப்பட்டுள்ளனர். இக்குழுவினர், ஈரோடு மாவட்டத்தில் உள்ள, 2,206 கிராமங்களுக்கு சென்று, தடுப்பூசி போடும் பணியை தீவிரப்படுத்தியுள்ளனர். தினமும் காலை, ஆறு முதல், பத்து மணி வரையும், மாலை, மூன்று முதல், ஐந்து மணி வரையும், இந்த முகாம் நடக்கிறது.அதேபோல், தினமும், 17 ஆயிரத்து, 445 தடுப்பூசி வீதம், கடந்த, 11 நாளில், ஒரு லட்சத்து, 83 ஆயிரத்து, 550

கால்நடை இனங்களுக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளது. இன்னும் மீதம், ஒரு லட்சத்து, 86 ஆயிரத்து, 450 தடுப்பூசிகள் மட்டுமே உள்ளது.மொத்தமாக, 21 நாளில், மூன்று லட்சத்து, 66 ஆயிரத்து, 290 தடுப்பூசிகள் போடுவதாக இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. வெயில்காலம் துவங்கியதால், தடுப்பூசி போடும் பணி விரைவாக நடந்து வருகிறது.

## 'கார்' மழையும் கைவிட்டது

**உடுமலை** : உடுமலை பகுதியில், 'கார்' மழையும் கைவிட்டு, வெயில் கொளுத்தி வருவதால், காய்கறி சாகுபடிகள் கைவிடப்படும் நிலை உருவாகி, விவசாயிகள் வேதனையடைந்துள்ளனர்.

உடுமலை பகுதியில், தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழையால், நிலத்தடி நீர் மட்டம் பாதுகாக்கப்பட்டு, கிணற்றுப்பாசனத்தின் மூலம் பல ஆயிரம் ஏக்கரில், காய்கறி சாகுபடி மேற்கொள்ளப்பட்டு வந்தது. கடந்த இரண்டு ஆண்டுகளாக பருவமழை உடுமலை பகுதியை கைவிட்டது. கடந்தாண்டு, தென்மேற்கு

பருவமழை சீசனான பிப்., மாதம் முதல் மே மாதம் வரை 300 மி.மீ.,க்கும் குறைவான மழையே பெய்தது. வடகிழக்கு பருவமழை சீசனான நவ., மாதத்தில் 101 மி.மீ., மழை மட்டுமே பெய்தது. இந்தாண்டு இதுவரை மழையளவு பதிவாகவில்லை. இவ்வாறு, இருபருவமழைகளும் கைவிட்ட நிலையில், பிப்., மற்றும் மார்ச் மாதத்தில் பெய்யும் கார் மழையும் இதுவரை இப்பகுதிக்கு கருணை காட்டவில்லை. அமராவதி அணைப்பகுதியில், 20 மி.மீ., க்கும் குறைவான அளவில் மட்டுமே கார் மழை பதிவானது. பருவமழைகள் கைவிட்ட நிலையில், இப்பகுதியில், கோடை வெயில் முன்னதாகவே துவங்கி, கொளுத்தி வருகிறது. இதனால், பல்வேறு பிரச்னைகளை விவசாயிகள் சந்தித்து வருகின்றனர். குறிப்பாக, பி.ஏ.பி., முதலாம் மண்டல பாசனத்தில், மூன்றாம் சுற்றுக்கு தண்ணீர் திறப்பு காலதாமதம் ஆனதால், பாசனப்பகுதிகளில், தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. பி.ஏ.பி., பாசனத்தை நம்பி மக்காச்சோளம் பயிரிட்ட விவசாயிகள் பயிர்கள் கருகி வருவதால், வேதனையடைந்துள்ளனர். மேலும், அதிகரித்துள்ள வெயில் காரணமாக, காய்கறி சாகுபடியில், பல்வேறு நோய்த்தாக்குதல் பரவி வருகின்றன. கிணறுகளில் உள்ள குறைவான தண்ணீரை கொண்டு, தக்காளி சாகுபடி நுாற்றுக்கணக்கான ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ளது. அதிக வெயில் காரணமாக, தக்காளி செடிகளில், பல்வேறு நோய்த்தாக்குதல்கள் ஏற்பட்டு, செடிகள் கருகி வருகின்றன. இது குறித்து பொட்டிநாயக்கனுார் கிராம விவசாயிகள் கூறுகையில், 'தக்காளி சாகுபடியில், திடீர் நோய்த்தாக்குதலால், செடிகள் கருகி வருகின்றன. செடியின் மேற்பகுதியிலுள்ள இலைகள் முதலில் கருகி, பின்னர் தண்டு அழுகி விடுகிறது. போதிய தண்ணீரில்லாமல், கஷ்டப்பட்டு பயிரிட்ட தக்காளி செடிகள் கருகி வருவது வேதனையளிக்கிறது', என்றனர். இதே போல் மக்காச்சோளம் சாகுபடியிலும் பல்வேறு நோய்த்தாக்குதல் காணப்படுவதாக விவசாயிகள் வேதனை தெரிவிக்கின்றனர்.

## கோடை மழையால் பசுமைக்கு திரும்பும் முதுமலை; விலங்குகளுக்கான உணவு தட்டுப்பாடு நீங்கும்

**கூடலூர்**: முதுமலையை பெய்த கோடை மழையை தொடர்ந்து, புற்கள் துளிர் விட துவங்கியுள்ளதால், வன விலங்குகளுக்கு உணவு தட்டுப்பாடு நீங்கும் சூழல் ஏற்பட்டுள்ளது.நீலகிரி மாவட்டம் முதுமலையில், கடும் வறட்சி காரணமாக, நீர்

நிலைகள் வறண்டு, வனப் பகுதியில் புற்கள் செடிகள் கருகி, வன விலங்களுக்கு உணவு, தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. வன விலங்குகள் உணவு, தண்ணீருக்காக இடபெயர்ந்துள்ளன.வறட்சியில் வனத்தீ ஏற்படுவதை தடுக்க, வனத்துறையினர் தீ தடுப்பு கோடுகள் அமைத்து, வனத்தீயை கண்காணித்து வருகின்றனர். மேலும், கடும் வறட்சியான பகுதிகளில் வன விலங்குகளின் தண்ணீர் தேவையை பூர்த்தி செய்ய, வாகனங்களில் தண்ணீர் எடுத்து சென்று தொட்டிகளில் ஊற்றி வருகின்றனர்.வறட்சி தொடர்ந்தால் முதுமலை மூடும் சூழல் ஏற்படும் என வனத்துறையினர் தெரிவித்திருந்தனர்.

இந்நிலையில், சமீபத்தில் இரண்டு முறை கோடை மழை சில மணிநேரங்கள் பெய்தது. இதனால், வனத்தீ ஏற்படும் சூழல் தடுக்கப்பட்டது. கோடை மழையை தொடர்ந்து, தற்போது, வறட்சியான பகுதிகளில் காய்ந்த நிலையில் காணப்பட்ட புற்கள், செடிகள் துளிர் விட துவங்கியுள்ளது. இதனால், வனப் பகுதியில் வறட்சி மறைந்து பசுமையாக மாறும் சூழல் ஏற்பட்டுள்ளது.வனத்துறையினர் கூறுகையில்,"வனப் பகுதியில் செடிகள் துளிர் விட துவங்கியுள்ளதால், சில வாரங்களில் வன விலங்களுக்கு உணவு தட்டுப்பாடு நீங்கும்; முதுமலை மூடும் சூழலும் தவிர்க்கப்பட்டுள்ளது' என்றனர்.

## அரிய வகை கடல் வாழ் உயிரினங்கள் பிடிப்பதை மீனவர்கள் தவிர்க்கணும்! கடலோர பாதுகாப்பு குழு தலைவர் அறிவுரை

**புதுக்கோட்டை**: ""தடை செய்யப்பட்டுள்ள அரிய வகை கடல் வாழ் உயிரினங்கள் பிடிப்பதை தவிர்க்கவேண்டும்," என, புதுக்கோட்டை மாவட்ட மீனவர்களுக்கு கடலோர பாதுகாப்பு குழுமத் தலைவர் சொக்கலிங்கம் அறிவுரை வழங்கியுள்ளார். புதுக்கோட்டை மாவட்டம் மணமேல்குடியில் கடலோர பாதுகாப்புக் குழுமம் சார்பில், மீனவர்களுக்கான விழிப்புணர்வு கூட்டம் நடந்தது. மாவட்ட கலெக்டர் மனோகரன் தலைமை வகித்தார். கடலோர பாதுகாப்பு குழுமத் தலைவர் சொக்கலிங்கம் பேசியதாவது:

புதுக்கோட்டை மாவட்டத்தில், கட்டுமாவடி முதல் மீமிசல் வரை, 33 கடலோரக் கிராமம் உள்ளது. இக்கிராமங்களிலிருந்து நாட்டுப் படகு மற்றும் விசைப்படகு மூலம் மீன்பிடி தொழில் செய்வதற்காக, கடலுக்குள் செல்லும் மீனவர்களின் பாதுகாப்பை உறுதிபடுத்துவதற்காகத்தான் இதுபோன்ற விழிப்புணர்வு கூட்டம்

நடத்தப்படுகிறது.

மீன்பிடிப்பதற்காக கடலுக்குள் செல்லும் மீனவர்கள் தனிமையில் செல்லாமல் குழுக்களாக செல்லவேண்டும். ஏதேனும் ஒரு அடையாள அட்டை, படகுகளுக்கான பதிவு சான்றிதழ், இன்சூரன்ஸ் சான்றிதழ் ஆகியவற்றின் நகல் மற்றும் மிதவை உள்ளிட்ட உயிர்காக்கும் உடமைகளை அவசியம் எடுத்து செல்லவேண்டும். படகுகளில், ஜி.பி.எல்., அல்லது வி.ஹெச்.எஃப்., உள்ளிட்ட தகவல் தொடர்பு கருவிகளை பொருத்த வேண்டும். மீன்பிடிப்பதற்காக கடலுக்குள் செல்லும் மீனவர்கள் போதைப் பொருள் கொண்டு செல்வதை தவிர்க்கவேண்டும். கடலுக்குள் சந்தேகப்படும் படியான நபர்களின் படகு தென்பட்டாலோ, ஆபத்துகள் நேரிட்டாலோ கடலோர பாதுகாப்பு படையினருக்கு, "1093' என்ற இலவச ஃபோன் எண்ணில் தொடர்புகொண்டு தகவல் தெரிவிக்க வேண்டும். விசைப்படகுகள் மூலம் மீன்பிடி தொழில் செய்துவரும் மீனவர்கள் கடலோரத்திலிருந்து, 3 கி.மீ., தூரத்துக்குள் மீன் பிடிப்பதையும், சர்வதேச கடல் எல்லையை தாண்டிச் சென்று மீன்பிடிப்பதையும் தவிர்க்கவேண்டும். கடல் வளத்தை பாதுகாக்கும் விதமாக தடை செய்யப்பட்ட இரட்டை மடி மற்றும் சுருக்குமடி வலைகளை பயன்படுத்தி மீன்பிடிப்பதை தவிர்க்கவேண்டும். இதுபோன்று திமிங்கலம், கடல்பன்றி, கடல்பசு, கடல் ஆமை, கடல் குதிரை, கடல் சங்கு உள்ளிட்ட, 52 வகையான அரிய வகை கடல் வாழ் உயிரினங்கள் பிடிப்பதை தவிர்க்கவேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

புதுக்கோட்டை எஸ்.பி., உமா, அறந்தாங்கி ஆர்.டி.ஓ., துரை, மீன்வளத்துறை உதவி இயக்குனர் திருநாவுக்கரசு உட்பட கடலோரக் காவல்படை அதிகாரிகள், மீனவர் சங்க பிரதிநிதிகள் பலர் பங்கேற்றனர்.

## தாண்டிக்குடி மலையில் பூத்து குலுங்கும் காபி பூக்கள்

**தாண்டிக்குடி**: தாண்டிக்குடி மலைப்பகுதியில் கோடை மழைக்கு காபி பூக்கள் பூத்துள்ளது.கடந்த இரண்டு ஆண்டுகளாக பருவ மழை கைகொடுக்காத நிலையில் மலை விவசாயம் பாதித்தன. நடப்பாண்டின் துவக்கத்தில் காபி விலை சரிந்து இருந்தது. கடந்த சில வாரங்களாக காபி விலையேற்றம் விவசாயிகளுக்கு புத்துணர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. மழையின்றி பழங்கள் பழுப்பதில் தாமத நிலையால், இதுவரை சீசன் நிறைவடையவில்லை. கடந்த சில தினங்களுக்கு முன்

கீழ்மலைப்பகுதியில் 96 மி.மீ., வரை கோடை மழை பெய்தது. இதனால் அராபிகா, ரோபஸ்டா காபி செடிகளில் பூவெடுத்துள்ளது. மலைத்தோட்டங்கள் வெள்ளை போர்வை போர்த்திய உணர்வையும், பூக்களின் வாசம் கவருவதாகவும் உள்ளது. விவசாயிகள் கூறுகையில், மழை நீடித்தால், இவை காய்களாக மாறும். இல்லையேல் உதிர்ந்து பாதிப்பை ஏற்படுத்தும், என்றனர்.

## வறட்சியால் மொச்சை விவசாயம் பாதிப்பு; விளைச்சல் இல்லாததால் விவசாயிகள் கவலை

**பழநி**: போதிய மழையில்லாததால், பழநி வட்டாரத்தில் மொச்சை விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது. திண்டுக்கல் மாவட்டத்தில் போதிய மழையில்லாதபோது, கிணற்று பாசனத்தை நம்பி, பழநி, நெய்காரப்பட்டி, ஆயக்குடி, கணக்கன்பட்டி போன்ற பகுதிகளில் மொச்சை பயிரிட்டனர். தை, மாசியில் விளைச்சல் அதிகரிக்கும். இந்த ஆண்டு தண்ணீர் இல்லாத காரணத்தால், முழுமையாக காய்ப்பு இல்லாமல், செடியில் மொச்சை பிஞ்சாக உதிரும் நிலை ஏற்பட்டது. இதனால் மொச்சை விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது.சந்தையில் பச்சை மொச்சை கிலோ ரூ.35 முதல் ரூ.45 வரையும், காய்ந்த மொச்சைபயறு கிலோ ரூ.72 க்கு விற்பனையாகிறது. தற்போது, வெயிலின் தாக்கத்தால், மொச்சைசெடிகள் காய்ந்து வருகின்றன. இதனால், போதிய விளைச்சல் இன்றி முன்னதாகவே அறுவடை செய்யப்படுகிறது.

மொச்சை பயிறுக்கு விலை கூடுதலாக கிடைத்தாலும், எதிர்பார்த்த விளைச்சல் இல்லாததால், விவசாயிகள் நஷ்டமடைந்துள்ளனர்.ஆயக்குடி விவசாயி ராமகிருஷ்ணன் கூறியதாவது: மூன்று ஏக்கர் பரப்பளவில், மொச்சை பயிரிட்டேன். தண்ணீர் இல்லாததால், செடிகளில் காய்ப்பு குறைந்தது. விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது. கடந்தாண்டு ஒரு குழிக்கு(75 சென்ட்) 2 மூட்டை கிடைத்தது. தற்போது ஒரு மூடை தான் கிடைக்கிறது. மொச்சை பயிறு மூடை ரூ.7,200 க்கு விற்கிறோம், என்றார்.

## வாழை கொள்முதலுக்கு தேனியில் குவியும் மும்பை கம்பெனிகள்

**தேனி**: தேனி மாவட்டத்தில் விளையும் வாழை தரமானதாகவும், அவற்றுக்கு, தனி சுவையும் உள்ளது. இந்த வாழைகள், அரபு நாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன.

இதன் மூலம் வாழை விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைத்து வருகிறது. இதனால், தேனி மாவட்டத்தில், ஒவ்வொரு வருடமும், வாழை சாகுபடி பரப்பளவு அதிகரித்துக் கொண்டே வருகிறது. தற்போது ஆஸ்திரேலியா, ஜெர்மனி, கொரியா போன்ற நாடுகளுக்கு, ஏற்றுமதி ஆர்டர்கள் குவிந்து வருகிறது. இந்நாடுகள் ஓராண்டிற்கு கொடுத்துள்ள ஆர்டருக்கு சப்ளை செய்ய, 30 ஆயிரம் எக்டேரில் வாழை சாகுபடி செய்திருக்க வேண்டும்.இங்கு விளையும் வாழையை கொள்முதல் செய்ய வசதியாக, மும்பையை சேர்ந்த ஏற்றுமதிக் கம்பெனிகள், தேனி மாவட்டத்தில் முகாமிட்டு, விவசாயிகளை அணுகி வருகின்றனர். இதனால், தேனி மாவட்டத்தில் வாழைத்தார் ஒன்று, 300 முதல் 450 ரூபாய் வரை விற்கப்படுகிறது. சில்லரை மார்க்கெட்டிலும் விலை உயர்ந்துள்ளதால், வாழை சாகுபடி செய்த விவசாயிகள் நல்ல பலன் அடைந்து வருகின்றனர்.

## பெரியாறு அணையில் நீர்திறப்பு குறைப்பு

**கூடலூர்**: பெரியாறு அணை நீர்பிடிப்பு பகுதியில் மழை குறைந்ததால், தமிழகப்பகுதிக்கு திறக்கப்படும் நீரின் அளவு குறைக்கப்பட்டுள்ளது. அண்மையில், பெரியாறு அணை நீர்பிடிப்பு பகுதியில் தொடர்ந்து மழை பெய்தது. இதனால், அணை நீர்மட்டம் 111.20 அடி வரை உயர்ந்தது. நீர்மட்டம் உயர்ந்ததைத் தொடர்ந்து, தமிழகப்பகுதிக்கு திறந்து விடும் நீரின் அளவு 200 கன அடியாக அதிகரிக்கப்பட்டது. இந்நிலையில், கடந்த நான்கு தினங்களாக மழை குறைந்து, நீர்வரத்தும் குறைந்தது. இதனால், நீர்மட்டமும் குறைந்து, நேற்று காலை நிலவரப்படி 110.90 அடியாக இருந்தது. இதனால், தமிழகப்பகுதிக்கு நீர்திறப்பு 100 கன அடியாக குறைக்கப்பட்டது. அணைக்கு நீர்வரத்து 15 கன அடி மட்டுமே உள்ளது. நீர் இருப்பு 1054 மில்லியன் கன அடி.

## விவசாயிகளுக்கு பயிற்சி

**ஸ்ரீவில்லிபுத்தூர்**: வேளாண் துறை சார்பில், விரிவாக்க சீரமைப்பு திட்டத்தில் கீழ், திருந்திய நெல்சாகுபடி பண்ணை பள்ளி வகுப்பு, செங்குளத்தில் நடந்தது. உதவி இயக்குனர் டாக்டர் ஆறுமுகம் தலைமை வகித்தார். திருந்திய நெல் சாகுபடி மூலம் மகசூல் அதிகரிப்பது பற்றி விளக்கினார். விவசாயிகள் சுந்தரம், காசி பண்ணை

கருவிகள் பயன்பாடு,அறுவடை, பின் செய் நேர்த்தி, தொழில் நுட்பங்கள் பேசினர். வட்டார தொழில் நுட்ப மேலாளர் லதா நன்றி கூறினார். ஏற்பாடுகளை பொன்ராஜ், லட்சுமி நாராயணன் செய்தனர்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

வடமாநிலங்களில் உற்பத்தி பாதிப்பு ஆப்பிள் விலை **20** சதவிகிதம் அதிகரிப்பு



**கொல்கத்தா:** வடமாநிலங்களில் ஆப்பிள் உற்பத்தி குறைந்துள்ளதால் அதன் விலை 20 சதவிகிதம் வரை உயர்ந்துள்ளது. இந்தியாவில் சில பகுதிகளில் அதிக அளவில் மழைபெய்வது, சில பகுதிகளில் காலம் தவறி மழைபெய்வது, வறட்சி உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் ஆப்பிள், வாழை, மாம்பழம் உள்ளிட்ட பழ வகைகள் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளதாக பழ வகைகளை சாகுபடி செய்யும் விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். இதுகுறித்து சிம்லாவை தலைமையிடமாக கொண்டு செயல்படும், ‘இந்திய ஆப்பிள் சாகுபடியாளர்கள் சங்கத்தின்’ தலைவர் ரவீந்தர் சவுகான் கூறுகையில், ‘கடந்த ஆண்டு காலம் கடந்து மழை பெய்தது. இதனால் ஆப்பிள் விளைச்சல் அதிக அளவில் பாதித்துவிட்டது. கடந்த ஆண்டு 3.5 லட்சம் பெட்டிகள் (ஒரு பெட்டிக்கு 20 கிலோ ஆப்பிள்) உற்பத்தியாகும் என்று

எதிர்பார்த்தோம். ஆனால், 2.5 லட்சம் பெட்டிகள் தான் உற்பத்தியானது. மேலும் குளிர்பதன கிடங்குகளிலும் ஆப்பிள் இருப்பு மிக குறைவாக உள்ளது. இப்படிப்பட்ட காரணங்களால் ஆப்பிள் விலை கடுமையாக உயர்ந்துவிட்டது. கடந்த 2 மாதங்களில் மட்டும், சுமார் 10 முதல் 20 சதவிகிதம் வரை ஆப்பிள் விலை அதிகரித்துள்ளது. தற்போது சாகுபடி நல்ல முறையில் இருக்கிறது. அடுத்த அறுவடை நடந்து சந்தைக்கு ஆப்பிள் வரத்து அதிகரிக்கும் வரை, இந்த விலை உயர்வு வரும் மே மாதம் வரை நீடிக்கும்' என்றார். வாழைப்பழ உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் பி.வி.பாட்டீல் கூறுகையில், 'வாழைப்பழ சாகுபடிக்கு அதிக அளவில் செலவாகிறது. தவிர பருவம் தவறி மழை பெய்வது ஆகிய காரணங்களால் வாழைப்பழம் விலை உயர்கிறது. இன்னொரு பக்கம் மகசூல் குறைவதாலும், தேவை அதிகரிப்பதாலும் அதன் விலை அதிகரிக்கிறது. மாம்பழம் ஒரு கிலோ ^100 முதல் ^130 வரை விற்கப்படுகிறது. மாம்பழம் சீசன் விரைவில் தொடங்கவுள்ளது. அப்போது அதன் விலை குறையும்' என்றார்.

**தேயிலை ஏற்றுமதி சரிவால் வருமானம் குறைந்தது**



**குன்னூர்:** குன்னூர் சிடிடிஏ தேயிலை ஏல மையத்தில் இந்தாண்டு ஜனவரி, பிப்ரவரி ஆகிய மாதங்களில் நடந்த 9 ஏலங்களில் மொத்தம் 98.02 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனையானது. விற்பனையான தேயிலை தூள் கிலோ ஒன்றுக்கு சராசரியாக 82.44 பைசா விலை வழங்கப்பட்டது. இதன்மூலம் மொத்த வருவாய் 80.79 கோடி கிடைத்தது. கடந்தாண்டு இதே காலக்கட்டத்தில் 1.13 கோடி கிலோ தேயிலை தூள் விற்பனை செய்யப்பட்டது. இதில் சராசரி விலை கிலோ ஒன்றுக்கு 98.63 பைசா கிடைத்தது. அதன்மூலம் மொத்த வருமானம் 111.45 கோடி கிடைத்தது. இந்த 2 ஆண்டுகளை யும் ஒப்பிட்டு பார்க்கும் போது கடந்தாண்டை

காட்டிலும் இந்தாண்டு 30.66 கோடி வருமானம் குறைந்துள்ளது. தேயிலை தூள் விற்பனையும் அதன் விலையும் சரிந்ததால் இந்நிலை ஏற்பட்டுள்ளதாக வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

### கூட்டுறவு ஆலைகளில் பசுந்தேயிலைக்கு குறைந்த மாதவிலை நிர்ணயம்

**மஞ்சூர்,** : மாவட்ட கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளில் பசுந்தேயிலைக்கு குறைவானவிலை நிர்ணயத்தால் விவசாயிகள்அதிருப்தி அடைந்துள்ளனர். நீலகிரி மாவட்டத்தில் மஞ்சூர், பிக்கட்டி, கிண்ணக்கொரை, எடக்காடு, மேற்குநாடு, மகாலிங்கா, கைகாட்டி, இத்தலார், கரும்பாலம், கட்டபெட்டு, எப்பநாடு, பிரான்டியர், பிதர்காடு, சாலீஸ்பரி மற்றும் பந்தலூர் ஆகிய 15 கூட்டுறவு ஆலைகளும் நுஉற்றுக்கும் மேற்பட்ட தனியார் ஆலை களும் இயங்கி வருகின்றன.

இதில் கூட்டுறவு ஆலைகளில் மட்டும் சுமார் 22 ஆயிரம் சிறு,குறு விவசாயிகள் உறுப்பினர்களாக உள்ளனர். இவர்களிடம் இருந்து தினமும் கொள் முதல் செய்யப்படும் பசுந்தேயிலைக்கு மாதம் ஒரு முறை குன்னூரில் உள்ள இன்ட்கோசர்வ் நிறுவனம் மூலம் விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. பின்னர் சம்பந்தப்பட்ட கூட்டுறவு ஆலை மூலம் விவசாயிகளுக்கு அவர்கள் வினியோகித்த பசுந்தேயிலைக்கேற்ப தொகை பட்டுவாடா செய்யப்படும். இந்நிலையில் கடந்த பிப்ரவரி மாதம் விவசாய உறுப்பினர்களிடம் இருந்து கூட்டுறவு ஆலைகளில் கொள்முதல் செய்யப்பட்ட பசுந்தேயிலைக்கு மாதவிலை நிர்ணயம் செய்வது தொடர்பான கூட்டம் குன்னூரில் உள்ள இன்ட்கோசர்வ் அலுவலகத்தில் நேற்று முன்தினம் மாலை நடந்தது. இந்த கூட்டத்திற்கு இன்ட்கோ சர்வ் சேர்மன் சிவக்குமார் தலைமை தாங்கினார். இதில், கடந்த மாதத்திற்கான பசுந்தேயிலையின் மாத விலை நிர்ணயம் செய்யப்பட்டு அறிவிக்கப்பட்டது. இதன்படி மாவட்ட கூட்டுறவு தொழிற்சாலைகளில் அதிகபட்சமாக மஞ்சூர், கூடலூர் சாலீஸ்பரி, பந்தலூர் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளில் பசுந்தேயிலை கிலோ ஒன்றுக்கு ரூ.13.10 மற்றும் கூடுதலாக 90 பைசா சேர் த்து ரூ.14 ஆக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. கைக £ட்டி கூட்டுறவு தேயிலை தொழிற்சாலையில் பசுந்தேயிலை கிலோ ஒன்றுக்கு ரூ.13.10 மற்றும் கூடுதலாக 40 பைசா சேர்த்து ரூ.13.50 என நிர்ண யம் செய்யப்பட்டுள்ளது. பிக்கட்டி, குந்தா (எடக்காடு), இத்தலார், கிண்ணக்கொரை, கரும்பாலம், மகாலிங்கா, எப்பநாடு, மேற்குநாடு, பிதர்காடு, பிரா ண்டியர் உள்ளிட்ட கூட்டு றவு

தொழிற்சாலைகளில் பசுந்தேயிலை கிலோ ஒன்று க்கு ரூ. 13.10 ஆகவும் மாத விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.கடந்த 4 மாதங்களுக்கும் மேலாக மாவட்டத்தில் நிலவி வரும் கடும் பனி பொழிவு மற்றும் உறை பனியின் தாக்கத்தால் தேயிலை மகசூல் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. குந்தா உட்பட பல்வேறு பகுதிகளில் தேயிலை தோட்டங்களில் சிவப்பு சிலந்தி நோய் தாக்கியுள்ளது.

இதனால் பசுந்தேயிலை வரத்து பல மடங்கு குறைந்து போனது. இலை வரத்து பெருமளவு குறைந்துள்ள நிலையில் பெரும்பாலான கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளில் கடந்த மாதங்களை விட பசுந்தேயிலைக்கு மாத விலை குறைவக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதாக விவசாயிகள் அதிருப்தி தெரிவித்தனர்.

## தேர்தல் கமிஷன் கெடுபிடிகளால் ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டில் ரூ2 கோடி காய்கறிகள் தேக்கம்

**ஒட்டன்சத்திரம், :** நாடாளுமன்ற தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட நிலையில் நடத்தை விதிகள் அமலுக்கு வந்ததால் தமிழகம் முழுவதும் அதிகாரிகள் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர். இதில் ரூ.50 ஆயிரத்திற்கு மேல் பணம் கொண்டு செல்பவர்கள் போதிய ஆவணங்கள் காட்டியாக வேண்டும். இல்லாவிட்டால் பணம் பறிமுதல் செய்யப்பட்டு அரசு கருவூலத்தில் சேர்க்கப்படும். தமிழகம் முழுவதும் நாள்தோறும் லட்சக்கணக்கான பணம் பறிமுதல் செய்யப்பட்டு வருகிறது.

இந்த நடைமுறை காய்கறி வியாபாரிகளுக்கு பெரும் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது. திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரத்தில் தினமும் ரூ.2 கோடி மதிப்பிலான காய்கறிகள் வியாபாரம் நடைபெறும். இதை வாங்க தமிழக, கேரள வியாபாரிகள் வருவர். ஞாயிறு முதல் வெள்ளிக்கிழமை வரை வியாபாரம் நடைபெறும். சனிக்கிழமை மார்க்கெட் விடுமுறை.

இந்த ஒரு வாரம் வாங்கிய காய்கறிகளுக்கு வியாபாரிகள் ஞாயிறு காலை பணம் வழங்க வேண்டும். இதற்காக கேரள வியாபாரிகள் அங்கு வசூலான தொகையுடன் ஒட்டன்சத்திரம் வருவர். இரண்டு தினங்களுக்கு முன்பு இரவில், கோவை மாவட்டம் பொள்ளாச்சி மடத்துக்குளம் வழியாக வரும்போது, 7 வியாபாரிகளிடம் ரூ.29 லட்சத்தை தேர்தல் அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். இதனால் கடந்த 2 நாட்களாக ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டில் வியாபாரிகள் வரத்து குறைந்து, ரூ.2 கோடி மதிப்பு காய்கறிகள் தேங்கின.

இந்நிலையில் நேற்று காலை கேரள, தமிழக வியாபாரிகள், அதிகாரிகள் நடவடிக்கையை கண்டித்து காய்கறிகளை வாங்க மறுத்தனர். இதையடுத்து

வியாபாரிகள், கமிஷன் கடைக்காரர்கள், விவசாயிகள் திண்டுக்கல்-பழநி சாலையில் மறியலில் ஈடுபட்டனர்.

ஒட்டன்சத்திரம் தாசில் தார் விஜயலட்சுமி, டிஎஸ்பி ஜானகிராமன், இன்ஸ்பெக்டர் இளவரசு ஆகியோர் மறியலில் ஈடுபட்டவர்களுடன் பேச்சுவார் த்தை நடத்தினர். பணத்தை பறிமுதல் செய்யும் அதிகாரிகளின் நடவடிக்கையை தடுத்து நிறுத்த வேண்டும் என மறியலில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தினர். அதிகாரிகள் சமரசத்தை தொடர்ந்து மறியல் வாபஸ் பெறப்பட்டது. மறியலால் ஒரு மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

இதையடுத்து வியாபாரிகள் சங்க தலைவர் தங்கவேல் தலைமையில் கலெக்டரை சந்தித்தனர். அவர்க ளிடம் பேச்சு வார்த்தை நடத்திய கலெக்டர் வெங்கடாசலம், கேரளாவில் கடைகளில் வசூல் செய்யும் பணத்தை கடையின் லெட் டர் பேடில் பில்போட்டு வாங்கி வந்தால் பணம் பறிமுதல் செய்யப்படாது என உறுதியளித்தார். இதையடுத்து நேற்று ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டில் வியாபாரம் மீண்டும் துவங்கியது.

## வெள்ளியணை பகுதியில் குளம், ஆறுகள் வற்றியது விவசாயப் பணிகள் பாதிப்புகலக்கத்தில் விவசாயிகள்

**கரூர்,** : வெள்ளி யணை பகுதியில் விளைச்சல் இல்லாததால் விவசாயிகள் மழையை எதிர்பார்த்துள்ளனர். கரூர் மாவட்டத்தில் கரூர், தாந்தோணி, க.பரமத்தி, அரவக்குறிச்சி, கிருஷ்ணராயபுரம், குளித்தலை, தோகமலை, கடவூர், ஆகிய ஒன்றியங்கள் உள்ளன. கரூர், கிருஷ்ணராயபுரம், குளித்தலை தாலுகாக்களின் பெரும்பகுதி காவிரி டெல்டா பகுதியில் உள்ளன. காவிரி பாசன பகுதியான இந்த வட்டாரத்தில் நெல், கரும்பு, வாழை பயிர்கள் காவிரியாற்று நீரை நம்பியே பயிரிடப்படுகின்றன. அரவக்குறிச்சி, பரமத்தி, தாந்தோணி, பகுதிகள் அமராவதி ஆற்று பாசனத்தை நம்பி உள்ளன. தோகமலை, கடவூர், ஒன்றியத்தில் கிணற்று பாசனத்தை அடிப்படையாக வைத்து சாகுபடி பணிகள் நடைபெறுகின்றன.

தாந்தோணி ஒன்றியத்தில் மூன்று சட்டமன்ற தொகுதியை சேர்ந்த கிராமங்கள் உள்ளன. கரூர், கிருஷ்ணராயபுரம், அரவக்குறிச்சி தொகுதிகளை சேர்ந்த கிராமங்கள் இந்த ஒன்றியத்தில் இடம் பெற்றிருக்கின்றன. தாந்தோணி ஒன்றியத்தின் ஒருபகுதி குடகனாறு அணை நீரை நம்பி உள்ளது. குடகனாறு அணையில் இருந்து வெள்ளியணையில் உள்ள குளத்திற்கு வரும் நீரை விவசாயிகள் பாசனத்திற்காக பயன்படுத்தி வருகின்றனர்.

வெள்ளியணை பகுதியில் சுமார் 200ஏக்கரில் நெல்பயிர் சாகுபடி நடைபெறும்.

கடந்த சில பருவங்களாக மழையில்லாததால் அணை மற்றும் குளங்களில் பாசன நீர் இல்லை. குறுவை சாகுபடி முன்புபோல விளைச்சல் இல்லை. சம்பா நெல் சாகுபடியும் ஓரளவுக்கே நடந்துள்ளது.

இதுகுறித்து விவசாயி கணேசன் கூறுகையில், வெள்ளியணை பகுதிக்கு குளம் மற்றும் குடகனாற்று அணை நீர் பாசனத்திற்காக பயன்படுகிறது. தற்போது மழை பெய்யாததால் குளம் அணை நீர் பாசனத்திற்கு கிடைக்கவில்லை. மழைபொய்த்ததால் நெல் சாகுபடியும் செய்யவில்லை.

சிறுதானியங்கள், மற்றும் காய்கறிகள் இப்பகுதியில் பயிரிடப்படுகிறது. கிணற்றுப் பாசனத்தை பயன்படுத்தி சிறிய அளவில் இந்த பயிர்கள் விளைவிக்கப்பட்டாலும் அவ்வப்போது, மின்தடை காரணமாக கிணற்றுப்பாசன நீரும் கிடைக்காத நிலை இருந்தது, தற்போது மின்சார பிரச்னையில்லாதால் கிணற்றுப் பாசனத்தில் முடிந்த அளவில் காய்கறிகள், சோளம், சூரியகாந்தி, மாட்டுத்தீவன பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது என்றார்.

கரூர் மாவட்டத்தில் 2011ம் ஆண்டு நெல்சாகுபடி இலக்கு 17600 எக்டேர் நிர்ணயிக்கப்பட்டு, 17625 எக்டேர் சாகுபடியானது. அதன்பிறகு பருவமழை பெய்யாததால் போதிய பாசனநீர் கிடைக்காமல் சாகுபடியும் நடக்கவில்லை. இந்த நிலை ஆண்டுக்கு ஆண்டு தொடர்ந்து குறைந்துகொண்டே வருவதாக விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

### விவசாயிகளுக்கு மண்புழு உரம் தயாரிக்கும் பயிற்சி

**பூம்புகார், :** பூம்புகாரில் விவசாயிகளுக்கு மண்புழு உரம் தயாரிக்கும் பயிற்சி அளிக்கப்பட்டது.

நாகை மாவட்டம் பூம்புகார் எம்.எஸ். சுவாமிநாதன் மீன் ஆராய்ச்சி நிறுவனம், மயிலாடுதுறை இந்தியன் ஓவர்ஸீஸ் வங்கி யின் ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி மையம் இணைந்து விவசாயம் சார்ந்த தொழில் பயிற்சியை கடந்த 5ம்தேதி முதல் நடத்தி வருகிறது. மரம் வளர்த்தல், காய்கறி பயிரிடுதல், நெல், கரும்பு மற்றும் விவசாயம் சார்ந்த பயிர்கள் பயிரிடுவதற்கான பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது. இதில் மண்புழு வளர்ப்பது பற்றி பயிற்சி அளிக்கப்பட்டது. அப் போது எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவன வேளாண் பயிற்சியாளர் செல்வராஜ் பேசுகையில், மண்புழு உரம் நிலத்திற்கு மிகவும் அவசியமானது. உயிருடன் மண்புழுக்களை வாங்கி மண், சாணம், தண்ணீர் மற்றும் சருகுகள் கொண்டு பதப்படுத்தி வெயில் இல்லாத நிழல் சூழலில் 45 நாட்கள் ஈரப்பதம் இருக்கும்படி வைக்க வேண்டும். மீண்டும் உரம் தயாரிக்க உயிருடன் இருக்கும் மண்புழுக்களை வேறிடத்திற்கு மாற்றிவிட்டு இவ்வாறு தயாரான உரத்தை நிலத்திற்கு

பயன்படுத்துவதன் மூலம், விளைச்சல் நல்ல முறையில் அமையும். மேலும், செடி களை தாக்கும் நோய்களின் தன்மையும் குறையும். இதனால் நிலத்திற்கு பயிரி டும் செயற்கை உரத்தை 50 சதவிகிதமாக குறைத்துக் கொள்ளவும் வாய்ப்புள்ளது. ஒரு ஏக்கருக்கு ஒரு டன் முதல் 2 டன் வரை மண்புழு உரம் இடுதல் அவசியம் என்று கூறினார். இதில் மயிலாடுதுறை, சீர்காழி, வானகிரி, கும்ப கோணம், கடக்கம் பகுதி யை சேர்ந்த விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## விவசாயிகளுக்கு மண்புழு உரம் தயாரிக்கும் பயிற்சி

**பூம்புகார், :** பூம்புகாரில் விவசாயிகளுக்கு மண்புழு உரம் தயாரிக்கும் பயிற்சி அளிக்கப்பட்டது.

நாகை மாவட்டம் பூம்புகார் எம்.எஸ். சுவாமிநாதன் மீன் ஆராய்ச்சி நிறுவனம், மயிலாடுதுறை இந்தியன் ஓவர்ஸீஸ் வங்கி யின் ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி மையம் இணைந்து விவசாயம் சார்ந்த தொழில் பயிற்சியை கடந்த 5ம்தேதி முதல் நடத்தி வருகிறது. மரம் வளர்த்தல், காய்கறி பயிரிடுதல், நெல், கரும்பு மற்றும் விவசாயம் சார்ந்த பயிர்கள் பயிரிடுவதற்கான பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது. இதில் மண்புழு வளர்ப்பது பற்றி பயிற்சி அளிக்கப்பட்டது. அப் போது எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவன வேளாண் பயிற்சியாளர் செல்வராஜ் பேசுகையில், மண்புழு உரம் நிலத்திற்கு மிகவும் அவசியமானது. உயிருடன் மண்புழுக்களை வாங்கி மண், சாணம், தண்ணீர் மற்றும் சருகுகள் கொண்டு பதப்படுத்தி வெயில் இல்லாத நிழல் சூழலில் 45 நாட்கள் ஈரப்பதம் இருக்கும்படி வைக்க வேண்டும். மீண்டும் உரம் தயாரிக்க உயிருடன் இருக்கும் மண்புழுக்களை வேறிடத்திற்கு மாற்றிவிட்டு இவ்வாறு தயாரான உரத்தை நிலத்திற்கு பயன்படுத்துவதன் மூலம், விளைச்சல் நல்ல முறையில் அமையும். மேலும், செடி களை தாக்கும் நோய்களின் தன்மையும் குறையும். இதனால் நிலத்திற்கு பயிரி டும் செயற்கை உரத்தை 50 சதவிகிதமாக குறைத்துக் கொள்ளவும் வாய்ப்புள்ளது. ஒரு ஏக்கருக்கு ஒரு டன் முதல் 2 டன் வரை மண்புழு உரம் இடுதல் அவசியம் என்று கூறினார். இதில் மயிலாடுதுறை, சீர்காழி, வானகிரி, கும்ப கோணம், கடக்கம் பகுதி யை சேர்ந்த விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## அறுவடை பணி தீவிரம் உளுந்து, பச்சை பயறு போதிய மகசூல் இல்லைவிவசாயிகள் கவலை

**கீழ்வேளூர், :** நாகை மாவட்டத்தில் உளுந்து, பச்சை பயறு அறுவடை பணி தீவிரமாக நடந்து வரு கிறது. வறட்சி காரணமாக இதில் போதிய மகசூல் இல்லாததால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். காவிரி டெல்டா பகுதியில் சம்பா சாகுபடிக்கு பின் நெல் தரிசில் உளுந்து, பச்சை பயறு வகை பயிர்கள் சாகுபடி செய்யப்படும். பெரும்பாலும் Êசம்பா நெல் அறுவடைக்கு ஒரு வாரத்திற்கு முன் பொங்கல் நேரத்தில் பதமான சேற்றில் உளுந்து, பச்சை பயறு வகை பயிர்கள் நேரடி விதைப்பு செய்யப்படும். இந்த பயிர் கள் மார்ச் மாதம் இறுதியில் அறுவடைக்கு வரும்.

இந்த ஆண்டு போதிய மழை இல்லாததாலும், மேட்டூர் அணை நீர் சரியாக கிடைக்க பெறாததாலும் நாகை மாவட்டம் கீழ்வே ளூர், கீழையூர், திருமருகல், நாகை, வேதாரண்யம், தலைஞாயிறு உட்பட பல் வேறு பகுதியில் சேற்றின் ஈரப்பதம் காய்வதற்கு முன் கூட்டியே அதாவது மார்கழி மாத ஆரம்பத்திலேயே உளுந்து, பயறு வகை பயிர் கள் விதைப்பு செய்யப்பட் டது. தற்போது இந்த பயிர் கள் அறுவடைக்கு தயாராகி அறுவடை பணி நடை பெற்று வருகிறது. நெல் பயிரில் ஏற்பட்ட சூறை நோய் மற்றும் வறட்சியால் நெல் வயல்களில் சேறு காய்ந்ததாலும் விதைப்பு செய்யப் பட்ட பயறு வகை பயிர்கள் சரி யாக முளைக்காததாலும், நெல் அறு வடை இயந்திரம் கொண்டு அறுவடை செய்த போது ஏற் பட்ட சேதத் தாலும் உளுந்து மற்றும் பச்சை பயிர்களில் போதிய மகசூல் இல் லை. ஒரு ஏக்கருக்கு கிடைக்க வேண்டி மகசூலில் மூன்றில் ஒரு பங்கு கூட கிடைக்க வில்லை.பொது வாக நெல் தரி சில் விதைக்கப்படும் உளுந்து, பயறு வகை பயிர்களுக்கு விதை மற்றும் விதைக்கும் செலவு தான். குறைந்த செலவில் அதிக லாபம் என்பதால் இதை பணப்பயிர் என்று சாகுபடி செய்வதற்கு விவசாயிகள் ஆர்வம் காட்டி வருவார் கள். இந்த ஆண்டு குறைந்த மகசூல் கிடைப்பதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

## கோமாரி நோய் தடுப்பூசி முகாம்

**ஸ்ரீமுஷ்ணம், :** ஸ்ரீமுஷ்ணம் அருகே கள்ளிப்பாடி ஊராட்சியில் ஸ்ரீமுஷ்ணம் வட்டார கால்நடைத்துறை மற்றும் புதுவாழ்வு திட்டம் சார்பில் கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நடந்தது. ஊராட்சி மன்ற தலைவர் தங்கவேல் தலைமை

தாங்கினார். சிதம்பரம் கால்நடை இயக்குனர் சதாசிவம் முகாமை தொடங்கி வைத்தார். ஆவின் கால்நடை மருத்துவர் சரண்யா, கால்நடை ஆய்வாளர் வேல்முருகன், பராமரிப்பு உதவியாளர் சாமியப்பன் ஆகியோர் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போட்டனர்.

இதில் புதுவாழ்வு திட்ட அணி தலைவர் ராமலிங்கம், ஒருங்கிணைப்பாளர்கள் பிரகாஷ், சக்திவேல், கறவை மாடு வளர்ப்போர் பூச்சரத்தின் செயலாளர் ஜோதிகுமார், மற்றும் கிராம வறுமை ஒழிப்பு சங்க உறுப்பினர்கள், ஊராட்சி அளவிலான குழு கூட்டமைப்பு உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். கணக்காளர் செல்வி நன்றி கூறினார்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**அரசு மதிப்பீடுகளுக்கு மாறாக கோதுமை உற்பத்தி குறையும்**



**புதுடெல்லி,**

அரசு மதிப்பீடுகளுக்கு மாறாக கோதுமை உற்பத்தி குறையும் நிலை ஏற்பட்டுள்ளது. பருவம் தவறி பெய்த மழை மற்றும் சூறைக்காற்று காரணமாக சில மாநிலங்களில் உள்ள கோதுமை வயல்களில் சேதம் ஏற்பட்டுள்ளது. எனவே உற்பத்தி பாதிக்கப்படும் என விவசாய ஆணையர் ஜே.எஸ். சந்து தெரிவித்தார்.

குளிர்கால பயிர்

கோதுமை குளிர்கால பயிராகும். ரபி பருவத்தில் (அக்டோபர்–மார்ச்) மிக முக்கிய பயிரான கோதுமை அறுவடைக்கு தயாராகிக் கொண்டிருக்கிறது. நடப்பு பருவத்தில் கூடுதலாக 61 ஆயிரம் ஹெக்டேரில் கோதுமை பயிரிடப்பட்டுள்ளது. எனவே இந்த ஆண்டில் கோதுமை விளைச்சல் அமோகமாக இருக்கும் என்றும், முந்தைய சாதனை அளவுகளை விஞ்சி உற்பத்தி அதிகரிக்கும் என்றும் மத்திய வேளாண் அமைச்சகம் மதிப்பீடு செய்திருந்தது. எனினும் மேற்கு மாநிலங்களில், குறிப்பாக குஜராத்தின் கடலோர பகுதிகளில் ஏற்பட்ட பருவநிலை கோளாறுகளால் அரசு மதிப்பீடுகளில் மாற்றங்கள் செய்யப்பட வாய்ப்புள்ளது.

61 ஆயிரம் ஹெக்டேர் அளவிற்கு கோதுமை பயிர் பாதிக்கப்பட்டிருந்தால் நடப்பு பருவத்தில் கோதுமை விளைச்சல் சென்ற ஆண்டு அளவிற்கே இருக்கும் என சந்து குறிப்பிட்டார். கடந்த ரபி பருவத்தில் 9.35 கோடி டன் கோதுமை உற்பத்தியாகி இருந்தது. நடப்பு பருவத்தில் விளைச்சல் 9.56 கோடி டன்னாக இருக்கும் என மத்திய அரசு மதிப்பீடு செய்திருந்தது. இந்நிலையில் சில மாநிலங்களில் ஏற்பட்டுள்ள பயிர்ச் சேதத்தை மற்ற மாநிலங்களின் உற்பத்தி ஈடு செய்யும் என சந்து மேலும் கூறினார்.

குஜராத்தின் உள்புற பகுதிகள், பீகார் ஆகிய இடங்களில் கோதுமை விளைச்சல் நன்றாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. கோதுமை உற்பத்தியில் முன்னிலை வகிக்கும் பஞ்சாப், அரியானா, உத்தரபிரதேசம் ஆகிய மாநிலங்களில் நிலவரம் மோசமாக இல்லை. பருவநிலை மாற்றங்களால் பல மாநிலங்களில் கோதுமையுடன், மற்ற ரபி பயிர்களும் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிகிறது.

கோரிக்கை

இந்நிலையில் மகாராஷ்டிரா, மத்தியபிரதேசம் ஆகிய மாநிலங்கள் பயிர் சேதத்திற்கு மத்திய அரசின் இழப்பீடு வேண்டி கோரிக்கை விடுத்துள்ளன. எனவே விரைவில் மத்திய அரசுக் குழு ஒன்று பாதிப்புக்குள்ளான இடங்களைப் பார்வையிட உள்ளது. கோதுமை விதைப்பு பணிகள் அக்டோபர் மாதத்தில் தொடங்கி, ஏப்ரல் மாதத்தில் அறுவடை நடைபெறுகிறது.

**கோழிப்பண்ணையாளர்கள் தீவனத்தில் கோடை வெப்பத்திற்கான மருந்துகளை சேர்க்கவேண்டும் ஆராய்ச்சி நிலையம் தகவல்**

**நாமக்கல்,**

கோழிப்பண்ணையாளர்கள் கோடை வெப்பத்திற்கான மருந்துகளை சேர்த்து வரவேண்டும் என வானிலை ஆராய்ச்சி நிலையம் சார்பில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

**ஆராய்ச்சி நிலையம்**

நாமக்கல் மாவட்டத்தில் இன்றும், நாளையும் நிலவும் வானிலை குறித்து நாமக்கல் கால்நடை மருத்துவ கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் சார்பில் வெளியிடப்பட்டு உள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

அடுத்த 2 நாட்கள் வானம் லேசான மேகமூட்டத்துடன் காணப்படும். மழை பெய்ய வாய்ப்பு இல்லை. காற்று இன்றும், நாளையும் முறையே 8, 7 கி.மீ. வேகத்தில் தெற்கு திசையில் இருந்து வீசும்.

வெப்பநிலையை பொறுத்த வரையில் அதிகபட்சமாக 95 டிகிரியாகவும், குறைந்தபட்சமாக 73.4 டிகிரியாகவும் இருக்கும். காற்றின் ஈரப்பதம் அதிகபட்சமாக முறையே 68, 67 சதவீதமாகவும், குறைந்தபட்சமாக 32, 33 சதவீதமாகவும் இருக்கும்.

**சிறப்பு வானிலை**

அடுத்த 2 நாட்கள் வானம் லேசான மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை முறையே 95 - 73.4 டிகிரி என்ற அளவில் இருக்கும். காற்றின் வேகம் மணிக்கு 7 - 8 கி.மீ. வரை பெரும்பாலும் தெற்கில் இருந்து வீசும். காற்றின் ஈரப்பதம் 32 - 68 சதவீதமாக நிலவும்.

அடுத்த 2 நாட்களுக்கும் காற்றின் வேகம் சற்று கூடுதலாகவே காணப்படும். இதனால் பகலில் அதிகபட்ச வெப்ப அளவு 95 டிகிரியாக காணப்பட்டு, அதற்கு மேல் உயரும் வாய்ப்பில்லை. ஆயினும் தற்போதைய வானிலையை

கவனிக்கும்போது, அதிகபட்ச வெப்ப அளவு படிப்படியாக மட்டுமே உயரும் வாய்ப்பு உள்ளதால் கோழிகளிடையே வெப்பத்தை தாக்கும் அல்லது வெப்பத்தை எதிர்கொள்ளும் இயல்பு இயற்கையாகவே காணப்படும். இதன் காரணமாக வெப்ப அதிர்ச்சி தற்காலிகமாக காணப்படாது. கூடுதலாக காற்றின் வேகமும் இப்பண்பினை அதிகப்படுத்தும். ஆயினும் கோழிப்பண்ணையாளர்கள் தீவனத்தில் கோடை வெப்பத்திற்கான மருந்துகளை சேர்த்து வரவேண்டும்.

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டு உள்ளது.

**வேளாண் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற முகாமில் 451 மாணவ–மாணவிகள் வேலைவாய்ப்புக்கு தேர்வு**

**கோவை,**

கோவை வேளாண்மை பல்கலைக்கழக, மாணவர் நல இயக்ககம் சார்பில், வேலைவாய்ப்பு முகாம் பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்று வருகிறது. இதில் வேளாண்மை பல்கலைக்கழகம், வேளாண் கல்லூரி, ஆராய்ச்சி நிலையங்கள் மற்றும் தோட்டக்கலை கல்லூரிகளில் படிக்கும் இறுதி ஆண்டு மாணவர்கள் 714 பேர் பங்கேற்றனர்.

இதில் கோவை, மதுரை, திருச்சி, கிள்ளிகுளம், பெரியகுளம், குமுலூர் ஆகிய இடங்களில் உள்ள வேளாண் கல்லூரிகள், மேட்டுப்பாளையத்தில் உள்ள வனவியல் கல்லூரியில் படிக்கும் மாணவர்கள் கலந்து கொண்டனர். முகாமில் 20 மேற்பட்ட பன்னாட்டு மற்றும் உள்நாட்டு நிறுவனங்கள் கலந்து கொண்டன.

மாணவ–மாணவிகள் தங்களுக்கு விருப்பம் உள்ள நிறுவனங்களுக்கு தங்களது சுய விவரங்களை(பயோ டேட்டா) அளித்தனர். அதன் அடிப்படையில் எழுத்துத்தேர்வு, குழு கலந்துரையாடல், நேர்காணல் என்ற 3 நிலைகளின் மூலம் மாணவ–மாணவிகள் வேலைவாய்ப்புக்கு தேர்வு செய்யப்பட்டனர். இதில் 415 மாணவ–மாணவிகள் வேலைவாய்ப்புக்கு தேர்வு செய்யப்பட்டு உள்ளனர்.

இந்த தகவலை கோவை வேளாண்மை பல்கலைக்கழகம் தெரிவித்து உள்ளது.

## 98 ஆயிரம் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி கலெக்டர் நடராசன் தகவல்



திருவாரூரை அடுத்த வடகால் கிராமத்தில் நடைபெற்ற கோமாரி நோய் தடுப்பூ முகாம் பணிகளை கலெக்டர் நடராசன் பார்வையிட்டபோது எடுத்தபடம்.

**திருவாரூர்,**

திருவாரூர் மாவட்டத்தில் 98 ஆயிரம் கால்நடை களுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடப்பட்டு உள்ளதாக கலெக்டர் நட ராசன் கூறினார்.

### கோமாரி நோய் தடுப்பூசி

திருவாரூர் மாவட்ட கிரா மங்களில் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடும் 6-வது சுற்று முகாம் கடந்த 1-ந் தேதி தொடங்கியது. இந்த முகாமில் சுமார் 2 லட்சம் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூபோட திட்டமிடப்பட்டுள்ளது.திரு வாரூரை அடுத்த கீழகா வாத் துக்குடி ஊராட்சி வடகால் கிராமத்தில் நடைபெற்ற கோமாரி நோய் தடுப்பூசி முகாமை கலெக்டர் நடராசன் பார்வையிட்டு ஆய்வு செய் தார். ஆய்வின் போது கலெக் டர் நிருபர்களிடம் கூறிய தாவது:-

### 98 ஆயிரம் கால்நடைகள்

திருவாரூர் மாவட்டத்தில் 2 லட்சம் கால்நடைகளுக்கு மோமாரி நோய் தடுப்பூசி போடும் பணி நடைபெற்று வருகிறது. 98 ஆயிரத்து 500 கால் நடைகளுக்கு தடுப்பூசி போடும் பணி நிறை வடைந் துள்ளது. கிராமங்களில் காலை 6 மணி முதல் 10 மணி வரையிலும், மாலை 3 மணி முதல் 5 மணி வரையிலும் தடுப்பூசி போடும் முகாம் நடக்கிறது.

**பொருளாதார இழப்பை தடுக்க...**

வருகிற 21-ந் தேதி வரை முகாம் நடைபெறும். பசுமாடு, எருமை மாடுகளுக்கு கோமாரி நோயைக் கட்டுப்படுத்து வதற்காக தடுப்பூசி போடப் படுகிறது. கால்நடை வளர்ப்பவர்கள் பொருளாதார இழப்பை தவிர்க்க கோமாரி நோய் தடுப் பூசியை போட்டுக் கொள்வது அவசியமாகும்.

இவ்வாறு கலெக்டர் கூறினார். நிகழ்ச்சியில் கால்நடை பரா மரிப்புத்துறை மண்டல இணை இயக்குனர் சின்னப்பா, கோமாரி நோய் தடுப்பூசி பணி கண்காணிப்பு அலுவலர் பாலகிருஷ்ணன், உதவி இயக் குனர்கள் தனபால், லூர்துசாமி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**விவசாயத்தில் நவீன முறைகளை பின்பற்றுவது அவசியம் அதிகாரி பேச்சு**

**குடவாசல்,**

விவசாயத்தில் நவீன முறைகளை பின்பற்றுவது அவசியம் என்று திருவாரூர் நபார்டு வங்கி உதவி பொது மேலாளர் ரவிசங்கர் கூறி னார்.

**விவசாயிகளுக்கு பயிற்சி**

திருவாரூர் மாவட்டம் குட வாசல் அருகே உள்ள தேதி யூரில் உழவர் மன்ற 3-ம் ஆண்டு விழாவையொட்டி விவசாயிகளுக்கான பயிற்சி முகாம் நடைபெற்றது. முகாம் தொடக்க நிகழ்ச்சியில் ஊராட்சி மன்ற தலைவர் சோமு தலைமை தாங்கினார். தொடக்க கூட்டுறவு வங்கி செயலாளர் லட்சுமணன், இயக்குனர் ராஜேந்திரன், வாணவில் தொண்டு நிறுவன செயலாளர் ராணி ஆகியோர் முன்னிலை வகித்தனர். உழவர் மன்ற முதன்மை ஒருங்கி ணைப்பாளர் சிவக்குமார் வர வேற்றார். திருவாரூர் நபார்டு வங்கி உதவி பொது மேலாளர் ரவி சங்கர், பயிற்சி முகாமை தொடங்கி வைத்து பேசினார். அப்போது அவர் கூறிய தாவது:-

**நவீன முறைகள்**

விஞ்ஞான வளர்ச்சி குறித் தும், நவீன விவசாய முறைகள் குறித்தும் விவசா யிகள் தெரிந்து கொள்ள வேண்டும். பொருளாதார வசதியை மேம் படுத்திக் கொள்ள விவசாயத் தில் நவீன முறை பின்பற்றுவது அவசியம். அதற்கு தேவையான உதவிகளை நபார்டு வங்கி செய்து தரும்.

மண் பரிசோதனை செய்தல், ஆழ்குழாய் கிணற்று நீரை பரிசோதனை செய்தல், புதிய பம்பு செட் அமைத்தல், சொட்டு நீர்ப்பாசனம் செய் தல், தரமமான விதை உற்பத்தி செய்தல் போன்ற முறைகளை கையாண்டு, செலவு அதிகம் இல்லாமல் வருமானத்தை உயர்த்தும் திட்டங்களை பின்பற்ற விவசாயிகள் முன்வர வேண்டும். அதற்கு தேவை யான பயிற்சி விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. இதை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

நிகழ்ச்சியில் வேளாண்மை உதவி இயக்குனர் விஜயகுமார், சிட்டி யூனியன் வங்கி கிளை மேலாளர் கிருஷ்ண மூர்த்தி, வேளாண்மை உதவி அலுவலர் பாக்கியராஜ், கால்நடை மருத் துவர்கள் ராஜாசரவணபவா, குணா, செல்வராஜ் மற்றும் பலர் கலந்து கொண்னடர். முடிவில் உழவர் மன்ற துணை ஒருங்கிணைப்பாளர் வாசு நன்றி கூறினார்.

**பரங்கிப்பேட்டை அன்னங்கோவில் மீன் ஏலம் விடும் தளத்துக்கு 20 டன் கவளை**



**பரங்கிப்பேட்டை,**

பரங்கிப்பேட்டை அன்னங்கோவில் மீன் ஏலம் விடும் தளத்துக்கு 20 டன் கவளை மீன்கள் வந்தது. இதனால் மீனவர்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

**மீன்ஏலம் விடும் தளம்**

பரங்கிப்பேட்டை பகுதி கடலோர மீனவ கிராமங்களான சின்னூர், புதுப்பேட்டை, புதுக்குப்பம், வேளங்கிராயன்பேட்டை, குமாரப்பேட்டை, மடவாப்பள்ளம், அய்யன்பேட்டை, அன்னப்பன்பேட்டை, மாலுமியார்பேட்டை, பேட்டோடை, பெரியக்குப்பம், முடசல்ஓடை, முழுக்குத்துறை, எம்.ஜி.ஆர்.திட்டு, பில்லுமேடு உள்பட சுமார் 50–க்கும் மேற்பட்ட கிராமங்களை மீனவர்கள் சுமார் 200–க்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் கடலுக்கு மீன்பிடிக்க செல்வது வழக்கம்.

அதேபோல் நேற்று முன்தினம் இப்பகுதி மீனவர்கள் தங்கள் விசைப்படகுகளில் மீன்பிடிக்க கடலுக்கு சென்றிருந்தனர். மீன்பிடிக்க நடுக்கடலுக்கு சென்ற மீனவர்கள் நேற்று காலை அன்னங்கோவில் மீன் ஏலம் விடும் தளத்துக்கு வந்தனர்.

**20 டன் கவளை மீன்கள் சிக்கியது**

அப்போது அவர்களின் படகுகளில் அதிக அளவு கவளை மீன்கள் கிடைத்திருந்தது. சுமார் 20 டன் கவளை மீன்கள் சிக்கியதும் தகவல் அறிந்த உள்ளூர் மற்றும் வெளியூர் பகுதி வியாபாரிகள் அன்னங்கோவில் மீன் ஏலம் விடும் தளத்தில் குவிந்தனர்.

இந்த வகை மீன்கள் அதிகம் இங்கு கிடைக்காததால் வியாபாரிகள் போட்டி போட்டுக்கொண்டு வாங்கி சென்றனர். குறிப்பாக கேரளா மாநில வியாபாரிகள் அதிக அளவில் இந்த மீன்களை வாங்கி சென்றதை காண முடிந்தது.

ஒரு டன் ரூ.20 ஆயிரம் முதல் ரூ.25 ஆயிரம் வரை விலைபோனது. இது தவிர வஞ்சிரம், கானாங்கத்தை, சூறை ஆகிய மீன்களும் கிடைத்தன. வஞ்சிரம் ஒரு கிலோ ரூ.400, கானாங்கத்தை கிலோ ரூ.100, சூறை கிலோ ரூ.80 –க்கும் விலை போனது. நேற்று வழக்கத்தை விட அதிக அளவு மீன்கள் சிக்கியதால் அன்னங்கோவில் மீன் ஏலம் விடும் தளத்தில் வியாபாரிகள், பொதுமக்கள் கூட்டம்

அதிகமாக காணப்பட்டது. மீன்கள் அதிக அளவில் கிடைத்ததால் பரங்கிப்பேட்டை பகுதி மீனவர்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

## மேல்மலையனூர் அருகே ரூ.34 லட்சத்தில் வளத்தி ஏரியை சீரமைக்கும் பணி தீவிரம்



பெரிய ஏரி சீரமைக்கும் பணி தீவிரமாக நடந்து வருவதை படத்தில் காணலாம்.

**மேல்மலையனூர்,**

ரூ.34 லட்சத்தில் வளத்தி ஏரி சீரமைக்கும் பணி தீவிரமாக நடந்து வருகிறது.

**சீரமைக்க கோரிக்கை**

மேல்மலையனூர் அருகே வளத்தியில் பெரிய ஏரி உள்ளது. பொதுப்பணித்துறை கட்டுப்பாட்டின் கீழ் உள்ள இந்த ஏரியில் தேங்கும் மழைநீரை நம்பி வளத்தி, தேவனூர், கெங்கபுரம் மற்றும் அதை சுற்றியுள்ள கிராமங் களை சேர்ந்த விவசாயிகள் விவசாயம் செய்து வருகின்றனர். கடந்த சில ஆண்டுகளாக போதிய மழை பெய்யாததால், பெரிய ஏரி நிரம்பாமல் இருந்தது. மேலும் மழைகாலத்தில் தேங்கும் மழைநீரும், பழுதடைந்த மதகு வழியாக வெளியேறி வீணாகி வந்தது. எனவே பெரிய ஏரியின் மதகு மற்றும் ஏரியை சீரமைக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

**பணி தீவிரம்**

அதன்படி 2013-2014-ம் ஆண்டு நீர்வள நிலவள திட் டத்தின் கீழ் ரூ.34 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதனை தொடர்ந்து தற்போது தரை அகலப்படுத்துதல், வரத்து வாய்க்கால் சீரமைத் தல், மதகு புதுப்பித்தல் ஆகிய பணிகள் தீவிரமாக நடந்து வருகிறது. இதனால் அப்பகுதி விவசாயிகள் மகிழ்ச்சி யடைந்துள்ளனர்.

**விவசாயிகளுக்கு இலவச உரம் வினியோகம்**



**வேப்பந்தட்டை,**

பெரம்பலூர் மாவட்டம் வேப்பந்தட்டையை அடுத்துள்ள உடும்பியம் வி.வி. சர்க்கரை ஆலை நிர்வாகம் சார்பில் மறுதாம்பு கரும்பு பதிவு செய்துள்ள விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ.1500 மதிப்புள்ள தலா ஒரு மூட்டை யூரியா, பொட்டாஷ் மற்றும் 10 கிலோ நுண்ணூட்டச்சத்து கலவைகளை இலவசமாக வழங்கும் விழா அரும்பாவூரில் நடைபெற்றது.

விழாவிற்கு சர்க்கரை ஆலையின் துணை பொது மேலாளர் புண்ணியமூர்த்தி தலைமை தாங்கி உர வினியோகத்தை விவசாயிகளுக்கு வழங்கி தொடங்கி வைத்தார். கரும்பு அலுவலர் (பயிற்சி ) அருண்குமார், உர வினியோகஸ்தர் குருசாமி மற்றும் கரும்பு ஆய்வாளர்கள், விவசாயிகள் கலந்து கொண்டனர். முடிவில் விவசாயி ரெங்கராஜ் நன்றி கூறினார்.